
# இன்னொரு காரணம்




சிவசங்கரி

# இன்னொரு காரணம்

சிவசங்கரி

திருமகள் நிலையம்
55. வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை 600017.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | "INNORU KAARANAM" |
| Author | : | SIVASANKARI |
| Copy Right | : | Author |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 1st October 1984<br>2nd Edition Jan. 1994 |
| Paper used | : | White Printing 11.6 Kg |
| Printing point | : | 10 Point |
| Printer | : | AMUDHAN ACCHAGAM<br>66, Periyar Street,<br>M G.R. Nagar, Madras-78. |
| Price | : | Rs. 11. |
| Publisher | : | THIRUMAGAL NILAYAM<br>55, Venkata Narayana Road,<br>T. Nagar, Madras-17.<br>Phone : 442899 |


# 1

தெருவில் வண்டி வரும் சப்தம் கேட்டு அவசரமாய் எழுந்து வாசல் வராந்தாவுக்குச் சென்ற கல்யாணி, அது தங்களுடையது இல்லை என்பது புரிந்ததும் சோர்வுடன் கைப்பிடிச் சுவர் மேல் சாய்ந்துக் கொண்டாள்.

மணி பதினொன்று.

இன்னும் இந்த சுரேஷைக் காணோம்.

ஏதடா, வீட்டில் அம்மா கவலையுடன் காத்திருப்பாளே என்ற நினைப்பு இல்லாமல் என்னதான் தோன்றித்தனம் இது.

எரிச்சலுடன் உள்ளே வந்து அமருகையில் ஏழுமலை எட்டிப் பார்த்தான்.

'என்ன?'

'சின்னய்யா வந்த மாதிரி இருந்துச்சு...தட்டு வைக் கட்டுமானு...'

கண்களில் தூக்கம், முகத்தில் நாள் முழுவதும் உழைத்த களைப்பு...

'நீ போய் படுத்துக்க... தம்பி வந்தா நா சோறு போட்டுக்கறேன்.'

எனக்கு

தூக்கம் வரலை. நா அவருக்காக காத்திட்டிருக்கேன் நீங்க வேணா படுங்களேன். பகல் பூரா தலைவலினு சொல்லிட்டிருந்தீங்க.

கல்யாணி அடி உதட்டைக் கடித்து நீளமாய் பெருமூச்சு விட்டாள்.

'தூக்கமா? எனக்கா? அதுதான் அந்தப் புண்ணிய வானோடே போயிடுச்சே...ஹூம் பூர்வ ஜென்மததுல பெரிசா ஏதோ பாவம் பண்ணி இருக்கேன்; இப்ப அனுபவிக்கிறேன்.'

அவள் வேதனை ஏழுமலையையும் தொத்திக் கொள்ள கலங்கின கண்களை துண்டால் துடைத்துக்கொண்டான்.

'இப்ப என்ன நடந்து போச்சுனு இந்த அளவுக்கு கலங்கறீங்க? சின்னய்யாவுக்கு சின்ன வயசு, விவரம் புரிஞ்சிக்க தெரியலை...அதான் எடுப்பார் கைப்பிள்ளையா இருக்குறாரு — ஒரு கால்கட்டை போட்டு பொறுப்பை உண்டாக்கினீங்கன்னா தன்னால வழிக்கு வந்திடுவாரு. அதை விட்டுட்டு ஏன் வேண்டாததை நினைச்சு உடம்பை கெடுத்துக்கறீங்க?'

கால்கட்டு...

யாரைப் பார்த்தாலும் இதைத்தான் சொல்லுகிறார்கள்.

பலன் இருக்குமா? செய்து பார்க்கலாமா?

'அப்படியே சோபால செத்த படுங்க... நா வாச வராந்தால உக்காந்துக்கறேன். வெறும் வயித்தோட இருக்கீங்களே, வேணா சூடா ஒரு டம்ளர் பால் கொணாந்து தரவா?'

வேண்டாம் என்று கல்யாணி தலை அசைத்ததும் கரிசனம் மிக்க குரலில் புரியாமல் என்னத்தையோ முணுமுணுத்தபடி அவன் வாசலுக்குச் சென்றான்.

ஏழுமலை அந்த வீட்டில் காலடி வைத்து வருஷம் பன்னிரண்டு ஆகிவிட்டது; கல்யாணியின் கணவர் ஷண்முகநாதன் இருந்த நாட்களில் நம்பிக்கையாய் ஒரு ஆள் தேவை என்று ஊரிலிருந்து வரவழைக்கப்பட்டவன்.

வரும்போது இருபத்தைந்து வயசு என்று வைத்துக் கொண்டாலும், இப்போது நாற்பதுக்குள்தான்.



கல்யாணம், மனைவி, பிள்ளை குட்டி என்று நினைக்காமல் தனிக்கட்டையாய் இருக்கக்கொண்டு, பழகினவன் நின்று விட்டான்; புது ஆளைத்தேடு என்ற அவஸ்தை இல்லாமல் இவர்களும் நிம்மதியாய் இருக்க முடிகிறது.

சும்மா சொல்லாக் கூடாது — ஏழுமலைவேலையிலும் கெட்டி, ஆளும் நல்லவன்.

வைத்த பொருள் வைத்த இடத்தில் இருக்கும். எஜமானி அம்மாள் அந்தப் பக்கம் போனால் ஒரு டம்ளர் பாலை குடித்துவிட்டு, பதிலுக்கு தண்ணீரை கலந்து வைக்கும் நீசத்தனமும் கிடையாது.

அதுவும் அகாலமாய் ஷண்முகநாதன் தவறிவிட்ட ஏழு வருஷங்களாய் வீட்டை கட்டிக் காத்து, சுரேஷுக்கும் கல்யாணிக்கும் ஆண் துணை என்று பக்கபலமாய் நிற்பது இவன்தான்.

ஏழு வருஷங்களா?

ம்... சித்திரை வந்தால் ஏழுதான் முடியப் போகிறது.

கணவர் இல்லாமல் ஒரு நொடிப் பொழுதை கழிப்பது கஷ்டம் என்று நம்பியது பொய்த்துப் போய் ஏழு வருஷங்களாகிவிட்டன.

உயரமும் பருமனுமாய், அடர்த்தியான மீசையும் வெங்கலக் குரலுமாய் எதிரில் நின்று 'கல்யாணி' என்று அழைத்த நாட்களை நினைக்கையில் சட்டென்று கண்களில் ஜலம் ஊறியது

எப்பேர்ப் பட்ட மனுஷர்.

என்ன குணம், என்ன மனசு.

ஒரு கெட்ட பழக்கம் உண்டா? மனசை சுணங்க வைக்கும் கேவலமான வார்த்தை உண்டா? தகாத நடவடிக்கை உண்டா?

யம்மாடி!

இருபது வருஷம் வாழ்ந்த வாழ்க்கையில் ஒரு அழுகை, ஒரு கத்தல்? ம்ஹூம் ஒன்றும் இல்லை.

அப்பேர்ப்பட்ட மனிதருக்கு சுரேஷ் போன்ற பிள்ளை வாய்த்திருக்கிறானே என்ற நினைப்பு கட்டுப்பாட்டையும் மீறிக்கொண்டு எட்டிப் பார்க்க, துக்கம் அதிகமானது,

பையனுக்கு நீ ஆனாலும் ரொம்பத்தான் எடம் கொடுக்கறே, கல்யாணி...

அய்... என்னங்க பெரிய்ய எடம்! சின்னப் பிள்ளை ஏதோ ஆசைப்படுது...சரினு சொல்லாம,நை நைனு புடுங்கிகிட்டே இருந்தா எப்படிங்க?... நமக்கு இருக்குறது அவன் ஒருத்தன் தானே; நீங்க அம்பாரமா சேர்த்து வைச்சிருக்கறதையெல்லாம் ஆளப் போற ராஜா அவன் ஒருத்தன் தானே! அப்படி என்ன பிரமாதமா அவன் கேட்டு விட்டான், நா வாங்கித் தந்திட்டேன்! அந்தந்த வயசுல அதை அனுபவிச்சா தாங்க சுகம்... விட்டுடுங்க.

ரொம்பச் சின்னப் பையனாய் சுரேஷ் இருக்கும்போது, கல்யாணியின் கெஞ்சலைச் செவிச் சாய்த்துச் சிரித்தபடியே அவரும் விட்டுவிட்டார் தான்.

ஆனால், வருஷங்கள் மறைந்து வயசு ஏற, ஏற ஸ்பாவத்தில் நேர்மையான அவரால் அப்படி விட்டேத்தியாய் இருக்க முடியவில்லை.

உன் பிள்ளை போக்கு நல்லாவே இல்லே கல்யாணி... ஒழுங்கா பள்ளிக்கூடத்துக்கே போறதில்லையாம்... படிக்கிறதில்லையாம். இப்ப கண்டிக்காம விட்டுட்டு, நாளைக்கு வீணா வருத்தப்படறதுலே அர்த்தம் இல்லே.

சின்ன வயசுக்காரனுக்குக் கொஞ்சம் விஷமமும், பிடிவாதமும் எல்லாம் இருக்கிறது சகஜம்தானே... நாலுல ஒரு நா பள்ளிக்கூடம் போகாட்டி என்ன, குடியா முழுகிடும்?



நாலுலே ஒரு நாள் இல்லே கல்யாணி இவன் ஒரு நாள் போனா, நாலு நாள் போறதில்லே. வேலை விஷயமா நா அடிக்கடி வெளியூர் போயிடற துணிச்சல் அவனுக்கு... இன்னிக்கு கந்தப்பன் வருத்தப்பட்டுக் கிட்டதும் தான், உடனே ஏதாச்சும் செய்யணும்னு உன்னண்ட சொல்றேன்.

கந்தப்பனா! அவன் கிடக்கான் பொறாமை புடிச்ச பய... அவனுக்கு ஏழு பொண்ணுங்க, பிள்ளை இல்லே... அதான் நம்ம பையனைப் பார்த்துப் பொறுமி சாகறான். கண்டவங்க பேச்சை நம்பிக்கிட்டு, வீணா பிள்ளைய கரிக்காதீங்க... நம்ம சுரேஷ் தங்கம்...

மனைவி பேச்சில் ஓரளவுக்கு கட்டுப்பட்டாலும் மனசு கேட்காமல் அன்றைக்கு சுரேஷை அழைத்து ஷண்முகநாதன் வாய்வார்த்தையாய் கண்டிக்க, அப்பா திட்டிவிட்ட கோபத்தை நாலு நாட்கள் சாப்பிடாமல் இருந்து அவன் அம்மாவிடம் காட்ட, பதிலுக்கு கல்யாணி பத்து நாட்களுக்கு புருஷனிடம் சரியாகப் பேசாமல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

இந்த மாதிரி நிறைய சம்பவங்கள். ஆனால் சுரேஷின் தில்லுமுல்லுகள் பற்றின முக்கால்வாசி சமாசாரங்கள் கல்யாணி வரையிலும் வந்து மேலே போகாமல் அமுங்கி விடும்.

மீறி சண்முகநாதனிடம் விஷயம் சென்றாலும் மகனுக்காக வரிந்து கட்டிக் கொண்டு பெற்றவள் வாதாடுவாள்'

'இள ரத்தம், தெரியாம பண்ணிட்டான், விட்டுடுங்க' என்பாள்.

'பணங்காசு இருக்குற பிள்ளைங்க ஒருத்தொருத்தன் தலைகால் புரியாமல் இருக்கறதைப் பார்க்குறப்போ நம்ம பிள்ளை ரொம்ப சமர்த்துங்க என்பாள்.

வேண்டாதபட்டவங்க என்னென்னமோ சொல்லி உங்க மனசக் கெடுக்கறாங்க. நீங்களும் அதெல்லாம் நிஜம்னு நினைச்சு பிள்ளைய போட்டு வதைக்கறீங்க? என்பாள்.

இருக்குறது கறுவேப்பிலை கண்ணாட்டம் ஒத்தை பிள்ளை, இதை நெஞ்சுல வைச்சி ஆதரவா வளக்காம, போட்டு மிதிக்கறீங்களே, இது உங்களுக்கே நியாயமா என்பாள்.

கண்ணைக் கசக்குவாள், குரல் செம்ம வக்காலத்து வாங்குவாள், இல்லாததையும் பொல்லாததையும் கூறி, எப்படியாவது பையனை அபவாதத்திலிருந்து காப்பாற்றி விடுவாள்.

சுரேஷ் பள்ளியில் இருக்கும்போதே சிகரெட் பிடிப்பதாக தகவல் வந்த போதும் படிக்காமல் தத்தாரியாய் ஊர் சுற்றுகிறான் என்று தலைமை ஆசிரியர் புகார் அனுப்பின போதும், இப்படித்தான், பிள்ளையை சரி பண்ண வேண்டுமே என்ற பதைப்பு இல்லாமல், அவனுக்காக கண் மூடித்தனமாய் வரிந்து கட்டிக் கொண்டு கல்யாணி வாதாடிய போது ஷண்முகநாதன் செய்வதறியாது தவித்திருக்கிறார்.

இது தப்பு கல்யாணி... இத்தனை தலைகால் புரியாத பாசத்தை பிள்ளை மேலே வைச்சிருக்குறதே; நாளைக்கு அவனை உருப்படாமப் பண்ணப் போகுது. முளைல கிள்ளலைனா கஷ்டம்... அஞ்சுல வளையாதது அம்பதில வளையாது — நாசொல்றதைக் கேளு... நீ கொஞ்ச நாள் பல்லை கடிச்சிகிட்டு இரு... நா கண்டிப்பா இருந்து அவனை வழிக்கு கொண்டு வந்திடறேன்... ஹாஸ்டல்ல விட்டாதானா ஒழுங்காயிடுவான்னு ஹெட்மாஸ்டர் சொல்...

அன்றைக்கு அவரை முழுக்க பேசவிடாமல் கல்யாணி கத்தினாள்.

'அய்யோ... என்னால் முடியாதுங்க... ஏதோ ஒரு சோமாறி தூண்டிவிடக் கொண்டு தெரியாத்தனமா சிகரெட் புடிச்சிட்டான். தப்புனு ஒத்துகிட்டு, இனிமே



ஒழுங்கா இருக்கேன்னு அவனே சொல்றதை காதுல வாங்காம நீங்க பாட்டுக்கு ஹாஸ்டல், அது, இதுனு சொன்னா? என் பிள்ளை என்னை விட்டு இருக்க மாட்டான்? என்னாலயும் அவனை விட்டுட்டு இருக்க முடியாதுங்க... வேணாங்க... இந்த ஒரு முறை மட்டும் அவனை மன்னிச்சு விட்டுடுங்க... இனிமே தப்புதண்டா செய்ய மாடடாங்க... நா உத்திரவாதம் தரேங்க...'

'என்ன உத்திரவாதமோ, என்ன சத்தியமோ...'

எதற்கும் அர்த்தம் இல்லாமல் போனது தானே கடைசியில் நடந்தது?

இங்கே, அங்கே ஆள் பிடித்து பணம் கொடுத்து ஒவ்வொரு வருஷமால் பாஸ் பண்ண வைத்து, உன் பாடு என்பாடு என்று கல்லூரியில் சேர்த்து, அங்கும் பணத்தாலேயே அத்தனை புகார்களையும், ஆசாமிகளையும் சமாளித்து.

கஷ்டம்... ரொம்பக் கஷ்டம்...

சுரேஷ் பிகாம் இரண்டாவது ஆண்டில் இருக்கையில் சொல்லாமல், கொள்ளாமல் ஷண்முகநாதனுக்கு திடுமென கான்ஸர் வந்தது.

தொண்டையில் துவங்கி, மெள்ள மெள்ள உடம்பின் ஒவ்வொரு பகுதியாய் அந்த ராட்சஸ நண்டு துளையிட்டு ஆளை அழித்த நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாய் கல்யாணிக்கும் ஞானம் பிறந்தது.

ஆயுசுக்கும் புருஷன் கல் மாதிரி இருப்பார். அவர் அருகில் இருக்கும் வரை எந்தப் பிரச்சனையும் நம்மை தாக்கி உடைக்காது என்று நம்பியது பிசுபிசுத்துப் போக, இனி தனியாய் இந்தப் பொறுப்பில்லாத பிள்ளையையும், வியாபாரம், சொத்து அத்தனையும் சமாளித்தாக வேண்டும் என்கிற பயம் நெஞ்சில் புகுந்துக் கொள்ள, தன்னைச் சுற்றி இருக்கும் நிஜத்தை முதல் முறையாக கண்ணைத் திறந்து பார்த்தவள் அரண்டுபோனாள்.

ஏகத்துக்கு செல்லம் கொடுத்து வளர்த்து விட்டதில் சுயநலவாதியாக உருபெற்றுவிட்ட பிள்ளையை எப்படி சரி பண்ணப் போகிறோம் என்று கலங்கியவள், தாலி கட்டினவரின் மடியில் படுத்து என்னங்க... நா என்ன செய்வேங்க... என்று சதா சர்வ காலம் பேதையாய் அழுவதைத் தவிர வேறு எதுவும் செய்யத் தெரியாத வளாகிப் போனாள்.

'கண் கெட்டப் பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய ஆசை வந்தவ நிலைல நீ இப்ப இருக்கே... எத்தனை தரம் முட்டி கிட்டேன், கேட்டியா? காய்ச்சல் வந்த பிள்ளைய உட்காரவைச்சி விருந்து சாப்பாடா போடுவாங்க? பத்தியமா போட்டு வாய கட்டினா, நாலாம் நாள் பக்குனு பையன் எழுநது உட்காருவான். தும்பை விடடுட்டு வாலை பிடிக்குற மாதிரி இப்ப கிடந்து தவிக் குறே... பிறவிலேயே குணம் கெட்ட பிள்ளைக்கு செல்லத்தைக் கொடுத்து அடியோட உருப்படாம அடிச்சிட்டு, இப்ப என்ன பண்ணுவேன்னு புலம்பினா நா என்ன செய்யட்டும், சொல்லு? இன்னிக்கோ நாளைக் கோனு சாவுகிட்ட போராடிகிட்டு இருக்குற நிலைல...

இப்படிஆற்றாமையுடன் பேசினாலும், உருப்படியாய் பல காரியங்களை செய்துவிட்டுத்தான் ஷண்முகநாதன் மறைந்தார்.

மனைவி சரியான இரண்டாங் கெட்டான், விவரம் தெரியாதவள், வெகுளி, முக்கியமாய் பிள்ளைப் பாசம் கண்ணையும் கருத்தையும் மறைக்க வாழ்பவள், தான் இறந்துவிட்டால் கடுகத்தனை பொறுப்பில்லாத பிள்ளை எண்ணி நாலு மாசம் போவதற்குள் அம்மாவை நடுத் தெருவில் நிறுத்தத் தயங்கமாட்டான் என்று ஊகிக்க, அதறகுத் தகுந்தாற்போல அவர் உயிலைத் தயாரித்தார்.

வீடு, நிலம், பாங்கில் உள்ள பணம், வியாபாரம் எல்லாவற்றுக்கும் ஏகபோக சொந்தக்காரி கல்யாணிதான் என்றும், எதையும் பிள்ளை, அல்லது யார் பெயரிலும்



மாற்ற அவளுக்கு அதிகாரம் இல்லைஎன்றும், மனைவிக்கு பிற்காலம் பிள்ளை வழி குழந்தைகளுக்கு இவை சொந்தம் என்றும், அப்படி குழந்தை பிறக்கவில்லையென்றால் மருமகளே அத்தனைக்கும் உரிமைக்காரிஎன்றும்.அவளுக்கு ஏதாவது ஆகிவிட்டால் மட்டுமே சுரேஷ் பெயரில் உடைமைகள் மாற்றப்பட வேண்டும் என்றும் சட்டமாய் எழுதி வைத்து விட்டுப் போனாரோ, இந்த ஏழு வருஷத் தில் முக்கால்வாசி சொத்துக்களாவது பத்திரமாக இருக் கின்றனவோ!

அப்பா இறந்த கையோடு, படிப்பைத் தொடர ஆசை இல்லாமல் அவர் இதுநாள் செய்து வந்த வியாபாரத்தில் புகுந்துகொண்ட சுரேஷுக்கு நெஞ்சுவரைக்கும்பெற்றவர் மேல் கோபம்தான், இந்த ரீதியில் உயில் எழுதிய தற்காக...

ஆனால், அம்மா இருக்கும் வரை, அம்மாவுக்கு தன் மேல் உள்ள அன்பு குறையாதவரை, எதற்கும் அஞ்சத் தேவையில்லை என்ற நினைப்பு தைரியத்தைக் கொடுக்க, உயிலை நினைத்து அவன் அதிகமாக அலட்டிக்கொண்டது இலலை.

ஆபீஸுக்குப் போய் வருகிறேன் என்று ஒப்புக்கு பேர் பண்ணினான், மானேஜரை நம்பி முழுக்க முழுக்க வியா பாரத்தை விட்டான் கையிலே காசிருக்கும்போது கவலை என்ன-என்கிற மனோபாவத்துடன் ராஜா வீட்டுக் கன்று குட்டியாக வளைய வந்தான்.

ஒட்டுண்ணிகளாக நண்பர்கள்; பை நிறையப் பணம், முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு சின்னதாக 'ஸாரிம்மா' என்று முணுமுணுத்தாலும்உருகிவிடும்தாய்... அப்புறம் என்ன?

மஜாதான்...

அவிழ்த்துவிட்ட ஏதோதான்...

ஷண்முகநாதன் இறந்து வருஷங்கள் நாலு போவதற்குள் 'வியாபாரத்தில் எக்கச் சக்க நஷ்டம், மூடி விடுவதைத் தவிர வேறு வழி இல்லை' என்றார் தன் பங்குக்கு கணக்கில்லாமல் சுருட்டிக்கொண்ட மானேஜர் மகா யோக்கியர் போல...

இருபத்தியிரண்டு வருஷங்களுக்கும் மேலாய் படாத பாடுபட்டு, அற்புதமாய் ஷண்முகநாதன் வளர்த்த வியாபாரம் பட்டுப் போக, உண்டான நஷ்டம் போதும் என்று ஒருநாள் கல்யாணி அலுவலகத்தை இழுத்து மூடினாள்.

இதன் பின் படம் எடுக்கிறேன், பைனான்ஸ் பண்ணு கிறேன் பேர்வழி என்று ஒரு வருஷம் போல சுரேஷ் கூத்தடித்து, இன்னும் ஒரு சில லகரங்களைத் தொலைக்க. யார் செய்த புண்ணியமோ கல்யாணி விழித்துக் கொண்டாள்.

இன்றைக்கெல்லாம் இருந்தால் பிள்ளைக்கு இருபத்தி ஐந்து வயசுதான் ஆகிறது; இந்த ரீதியிலேயே விட்டால் இவன் எதிர்காலம் என்னாவது? அத்தனையும்தொலைத்து விட்டால் நாளைய வாழ்க்கைக்கு என்ன செய்வான்என்று பயந்தவள் (அப்போதும் பிள்ளையின் சௌகர்யங்கள் பாதிக்கப்படுமோ என்று கவலைப்பட்டாளே ஒழியவும் தான் என்ன ஆவோம் என்று சிந்திக்கவில்லை என்பது வேறு சமாசாரம்) மனசை இறுக்கிக் கொண்டு பிள்ளை யிடம் கண்டிப்பைக் காட்ட துணிந்தாள்.

'படமும் வேணாம், பைனான்ஸ்தொழிலும்வேணாம். எங்காச்சும் கண்ணியமா வேலைக்குப் போய் வர்றதுனா சரி; இல்லாட்டி இருக்குறதை வைச்சிகிட்டு ஒருத்தர் வழிக் கும் போகாம வீட்டோட இரு...அப்பா போய் அஞ்சு வருஷமாகலை, அதுக்குள்ளாற நம்ம சொத்துல பாதிய நீ தொலைச்சுட்டே, இனியும்இப்படி போக நா சம்மதிக்க மாட்டேன்.

கறாறாய் பேசியதோடு,தொடர்ந்து அதிகமாய்பணம் கொடுக்காமல், குழையும் பிள்ளைக்கு இடம் தராமல்



கல்யாணி இருக்க, அடுத்து வந்த மாசங்களில் கொஞ்சம் நல்ல பிள்ளையாக இருக்க சுரேஷ் முயற்சித்தான்.

கல்யாணி எள் என்றால் எண்ணையாக நின்றான். எதிர்த்து போசாமல் 'எனக்குத் தெரியாததாம்மா' என்று அம்மாவோடு உட்கார்ந்து வேளைக்கு சாப்பிட்டான். பின்னோடு கோவிலுக்குப் போனான் மொத்தத்தில் மிக கச்சிதமாக ஐஸ் வைத்து இரண்டே மாசத்தில் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற்றாள்

அப்புறம் சும்மா இருக்க முடியாமல் ரியல் எஸ்டேட் தொழிலை தொடங்க அடி போட்டான்.

'எனக்கு வாக்கு சாதுர்யம். அதிகம்மா பேசிப் பேசி, ஜனங்களை வசியம் பண்ணிடுவேன். இந்தத் தொழிலுக்கு இந்த ஒரு குவாலிஃபிகேஷன் போதும்...நீ பயப்படாதே... மூலதனம அதிகமா தேவையில்லே... 'சரி' னு சொல்லு, போதும், இன்னும் ஒரு வருஷத்துல நீயே ஆச்சர்யப்படும் படி சம்பாதிச்சுக் காட்டறேன் பாரு' என்றவன் சம்பாதித்து வாரி கொட்டா விடினும், ஓரளவு வருவாயைக் கண்ணில் காட்ட ஆஹா என் பிள்ளை போல உண்டா என்று கல்யாணி பூரித்துப் போனாள்.

அந்த சந்தோஷத்தில்தான் மகனிடம் உண்டான மாற்றத்தைக் கவனிக்க அவள் தவறி இருக்கவேண்டும்.

ஒரு 'இது'க்கா குடிக்கத் துவங்கிய குடிப்பழக்கம், பொதுவாக சுரேஷைக் குடிக்க ஆரம்பித்து விட்டதை புரிந்துக் கொள்ளாமல் இருந்துவிட, வெள்ளம் தலைக்கு மேல் சாண் இல்லை, முழத்தைத் தாண்டிவிட்ட பிறகே இன்றைக்கே உண்மை நிலை கல்யாணியின் கன்னத்தில் அறைந்து கொண்டிருக்கிறது.

பகலிலேயே குடிக்கத் துவங்கி விடுகிறான்; வெறும் வயிற்றோடு குடிக்கிறான், கண்டவர்களுடன் சேர்ந்து கண்டதையும் குடிக்கிறான். குடித்துவிட்டு இன்னும்

ஏதோ அசிங்கங்களை எல்லாம் செய்கிறான். முக்கியமாய் குடிக்காமல் ஒருநாள் கூட இருக்க முடியவில்லை என்றான்!

என்னப்பனே முருகா!

கடந்த நாலைந்து மாசங்களாய், கல்யாணியும் கெஞ்சி கொஞ்சி பார்த்து விட்டாள், அதட்டி, மிரட்டிப் பார்த்து விட்டாள்.

எல்லாத்துக்கும் பெப்பேதான்.

'ஸாரிம்மா' என்கிறான் கண் நிறைய நீருடன், இனிமே சத்தியமா குடிக்கமாட்டேன்' என்கிறான் இவள் கையை பற்றிக் கொண்டு. அப்புறம்...

என்னப்பனே முருகா!

இந்தச் சுழலிலிருந்து பிள்ளையை மீட்க வழியே இல்லையா?

புருஷன் இல்லாத பெண், ஒண்டியாய் அவஸ்தைப் படுவது உனக்குப் பரிதாபமாக இல்லையா?

கொஞ்சம் கருணை காட்டேன்.

ஒரு வழியைச் சொல்லேன்.

அவஸ்தையும் வேதனையும் அதிகமாகிக் கண்களில் நீராய் வடிய, கல்யாணி குனிந்து தலைப்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டாள்.

அன்றைக்கு ஒன்னரை மணிக்கு போதை அதிகமாகி விட்ட சுரேஷை இரண்டு நண்பர்கள் வீட்டில் கொண்டு வந்து சேர்க்க, அரை மயக்கத்தில் கிடந்த பிள்ளையை ஏழுமலையின் உதவியுடன் மூச்சிரைக்க படுக்கையில் கிடத்தி ஒரு பெட்ஷீட்டால் போர்த்தி, பேனைச் சுழல விட்டு, கவலையுடன் அவன் அருகிலேயே அமர்ந்து இந்த பிரச்சனைக்குத் தீர்வு என்ன என்று அரற்றியவள், மறுநாள் காலை விடிவதற்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தாள்.

## 2

'வாங்க மாமா... எப்படி வந்தீங்க? பஸ்ஸிலியா ரயில்லியா?'

'இப்ப ஏதும்மா ரயில்! மொத பஸ்ஸுக்குத்தான் வந்தேன். நேத்து உன் சுடுதாசைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் என்னவோ ஏதோனு கலங்கிட்டேன். சாதாரணமா 'உடனே வாங்க' னு எழுதறவ நீ இல்லாதக் கொண்டு அடி வயத்துல ஒரு பயம்... என்ன விஷயம்?

'பயப்படும்படி ஒண்ணும் இல்லேமாமா, நீங்க முதல்ல கை, காலை கழுவிகிட்டு காபி, பலகாரம் சாப்பிடுங்க. மெதுவா பேசுவோம்'

'சுரேஷ் எங்க?'

'வெளில போயிருக்கான்.'

'ஆபீஸ் எல்லாம் ஒழுங்கா நடக்குதா? அதுல ஒண்ணும் தகராறு இல்லியே?'

'அது நடக்குது வழக்கம் போலத்தான்... நீங்க வாங்க முகம் கழுவிகிட்டு. பலகாரம் சாப்பிடுங்க... இந்தா ஏழுமல... மாமா வந்திருக்காரு பாரு; பைய வாங்கி வை... இட்லி ஒரு தட்டு சூடா ஊத்து.'

கால்மணி கழித்து இட்லி சாப்பிட்ட நாழிகையில் பக்கத்தில் அமர்ந்து தன் தீர்மானத்தை பையப் பைய கல்யாணி எடுத்துரைத்தாள்.

'அவுரு இருந்தப்ப ஆயிரம் தடவை முட்டிகிட்டாரு... நா காதுல வாங்காம இருந்திட்டு, இப்ப ஒண்டியா கிடந்து அவஸ்தை படறேன். ஹூம்... அந்தக் கதை

எல்லாம் உங்களுக்கு சப்ஜாடா தெரியும், நா சொல்ல ணும்றது இல்லே... வரவர சுரேஷை நினைச்சா என் கவலை அதிகமாகுது மாமா... அவன் போக்கு சரியில்லாத மாதிரி படுது. தோளுக்கு மீறி வளர்ந்திட்டான் நானோ பொம்பளை. அதட்டினாலும் கெஞ்சினாலும் அடங்க மாட்டேன்றான். போன ட்ரிப் வந்தப்பவே நீங்க 'ஒரு கால் கட்டை போடு, தன்னால் அடங்கிடுவான்' னு சொன்னீங்க. 'இருபத்தி நாலு வயசுதானே ஆவுது — என்ன அவசரம்' னு பேசாம இருந்தது தப்புனு இப்பத் தான் புரியுது... உடனே இதுக்கு ஏதாச்சும் வழி செய்யலைனா நிலைமை கட்டுக்கடங்காம போயிடும். நாலு நாளா எனக்கு இதே யோசனை. ஒரே குழப்பம். அதான் பெரியவங்களா உங்களை வரச் சொல்லி பேசிடலாம்னு தீர்மானம் பண்ணினேன்.'

'ம்ம்... ஷண்முகம் இருந்தப்ப தலையால அடிச்சிகிட்டார், 'ஓவரா செல்லம் கொடுத்துப் புள்ளைய கெடுத்திடாதே' னு. நீ அசால்டா இருந்திட்டே! விடு... இப்ப பழங்கதை பேசி என்ன புண்ணியம்?... சரி ஒண்ணு கேக்குறேன், பதில் சொல்லு. சுரேஷ் போக்கு சரியில்லேனு சொல்றியே, எந்த வகைல சரியில்லே?'

கல்யாணி அவரைப் பார்ப்பதைத்தவிர்த்துத் தரையில் பார்வையை வீசினாள்.

ஆயிரம் ஆனாலும் பிள்ளை, பொட்டென்று பெற்றவளே காட்டிக் கொடுக்கலாமா?

'சொல்லு கல்யாணி.'

'என்னனு சொல்றது மாமா? உங்களுக்குத் தெரிஞ்ச விஷயம்தான். சின்ன பையனாட்டம் சதா பொறுப்பில்லாம சுத்தறான். எனக்கும் வயசாயிட்டு வருது... படபடப்பு பிரஷர் முன்னைக்கு இப்ப கூடிடிச்சி. நா நல்லா இருக்குறப்பவே, இந்த வீட்டுப் பொறுப்பை ஒருத்திகிட்ட ஒப்படைச்சிடணும்னு ஆசை; அதான்...'



'இதுக்கு என்னத்துக்கு இத்தனை தயக்கம்! ஜம்முனு சிரிச்சுகிட்டு, 'எம்மவனுக்கு ஏத்த மருமவளா பாருங்க மாமா.' 'சொன்னா ராஜாத்தி கணக்கா பொண்ணுங்களை க்யூ வரிசைல கொணாந்து நிக்க வைச்சிட மாட்டேனா?'

கொதித்த காபியை ஆற்றி, குடிக்கும் சூட்டில் மாமாவிடம் கல்யாணி நீட்டினாள்.

'செய்வீங்கதான். ஆனா, ரொம்ப பெரிய மனுஷங்க வீட்டுப் பொண்ணு தேவைதானானு யோசிக்கறேன்...'

'அ...அ...அப்படிச் சொன்னா? உன் பையனுக்கு என்ன? கண்ணுக்கு ராஜா...குந்தி சாப்பிட்டாலும் மூணு தலைமுறைக்கு சொத்து...'

'அதெல்லாம் சரிதான் மாமா... ஆனாலும்...'

டம்ளரை தழைத்தார்; கண்களை இடுக்கிக் கொண்டு அவளை ஏறிட்டார்.

'என்ன நீ! ஆனா, ஆவனான்னு இழுத்துகிட்டே இருக்கே! மனசுல இருக்குறதை பட்டுனு சொன்னாதானே புரியும்!'

'எனக்கென்னமோ சாதாரண குடும்பத்துப்பெண்ணா பார்த்து மருமகளாக்கிட்டா போதும்னு படுது...'

'ஏன்? அதான் ஏன்னு கேக்கறேன் இல்லே?'

'ரொம்ப படிச்ச, பணக்கார வீட்டு பொண்ணுனா எனக்கு அடங்கி இருப்பாளோ மாட்டாளோ...எனக்கும் ஒத்தைப் பிள்ளை; இவன் நிழலை விட்டா போக்கிடம் இல்லே... மருமக வந்தா, ஆத்தாளையும், மகனையும் பிரிச்சிட்டான்ற அபவாதம் வேணாம் பாருங்க.'

மாமா முகவாயை தேய்த்துக்கொண்டு யோசித்தார்.

'நீ சொல்லறதும் ஒரு விதத்துல ரைட்டுதான். சரி... பெரிய எடமா வேணாம்... அப்புறம்?'

'பள்ளிக்கூட படிப்பு படிச்சிருந்தா போதும் மாமா... சுரேஷ் காலேஜ் படிப்பை முடிக்காதவன், அவனுக்கு மேல படிச்சவளா இருந்தா, மனசுல நாம உசத்தி, இவன் மட்டம்ன்ற எண்ணம வரலாம்?'

'ஆக, சாதாரண குடும்பத்து பொண்ணா, அதிகம் படிக்காதவளா, அடங்கி ஒடுங்கி இருந்தா தேவலைனு சொல்றே?'

'அதே தான். கண்ணுக்கு லட்சணமா, குணவதியா இருந்தா போதும்...மத்தபடி சீர்செய், அத்தகொண்டானு பிடுங்கறது தப்புனு அவுரு சொல்வாரு...இவன் குடியும் குடுத்தனமா ஆயிட்டதை நல்லபடியா பார்க்கணுமேனு கவலையா இருக்கு மாமா...

'நீ கேக்குற ரீதிலே ஒண்ணு ரெண்டு பொண்ணுங்க தயாரா இருக்குது... எதுக்கும் நீ கவலைப்படாதே...நா இருக்கேன்... என்ன?'

'யாரு மாமா பொண்ணு? சொந்தமா?'

'உனக்குத் தெரியாம சொந்தத்துல யாரு இருக்காங்க? இல்லே, தெரிஞ்ச குடும்பம். போய் பேசிட்டு வந்து மத்த விவரத்தை சொல்றேன்.

இரண்டு பேரும் பேசிக் கொண்டே கூடத்தில் வந்தமர்ந்தனர்.

'ஆமா, கல்யாணமே வேணாம்னு சுரேஷ் அடம் பிடிக்குறதா முன்னே சொன்னியே. இப்ப அவன் சம்மதிச்சுதானே இந்த பேச்சை எடுத்திருக்கே?'

பிள்ளை விஷயத்தில் சாதுர்யமாய்ப் பூசி மெழுகின தினுசில் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் கல்யாணி கெஞ்சலாய் மாமாவை ஏறிட்டாள்.

'அவன் இன்னமும் அதே பிடிவாதத்தோட தான் இருக்கான். நீங்க பெரியவரா அவனண்ட பேசி, ஒரு வழிக்கு கொண்டு வ்ரணும்...'



'நா ரெடி...ஆனா, அவன் கேக்கணுமே.'

'எனக்கு உடம்புக்கு முடியாததை சாக்கு காட்டி நாம எல்லாருமா அடிச்சு பேசி சம்மதிக்க வைச்சிடணும்... டாக்டர் கிட்ட பேசினேன். அவரும் 'உங்கம்மாவுக்கு இதயம் பலவீனமா இருக்கு... மனசந்தோஷம் இல்லாம இருக்காங்க. அவங்க திருப்திக்கு வேண்டியாவது நீ கல்யாணம் பண்ணிக்கணும்'னு புத்தி சொல்றேன்னு சொல்லிட்டாரு...'

'அப்புறம் என்ன? முயற்சி பண்ணீ ஜெயிச்சுடுவோம். எங்கே அவன்? வந்தான்னா இப்பவே மடக்கிடகூட நா தயார் தான்...'

உற்சாகத்தோடு பேசியவரை கல்யாணி தடுத்தாள்.

'எனக்கென்னவோ கையிலே பொண் படத்தை வைச்சிகிட்டு அவனண்ட பேசறதுதான் சரினு தோணுது... இப்ப நாமஏதாவது சொல்லப்போயி, அவன்மாட்டேன்னு சொல்லிட்டான்னா, உள்ளதும் போச்சு நொள்ளக் கண்ணானு நாம உட்காரணும்.'

'பொண்ணைபேசிட்டப்புறம் மாட்டேன்னுசொல்லிட்டான்னா?'

'அழகான பொண்ணு படம் கையில இருந்தா மறுக்கறது கொஞ்சம் கஷ்டம் இல்லியா மாமா?'

'அப்ப, இன்னிக்கு அவன் கிட்ட பேச வேணாங்கறே?'

'ம்...'

'சரி மேற்கொண்டு என்ன பண்ணனும், அதையும் சொல்லிடு.'

'நீங்க இன்னிக்கே புறப்பட்டுப் போயி நல்ல இடமா பாருங்க. நா கேக்கறவிதத்துல கையிலே பொண்.இருக்குனு சொன்னிங்களே, முதல்லே அந்த இடத்தைப் பாருங்க.

ஒரு வாரத்துல இரண்டுமூணுபொண்ணுங்கபடங்களோட நல்ல சேதியா எடுத்துகிட்டு வாங்க. அப்புறம் முருகன் இருக்கான் மீதிய பார்த்துக்க.'

சுரேஷ் குடித்துவிட்டு வரும்போது மாமா வீட்டில் இருக்க வேண்டாம் என்று திட்டம் போட்டு அவரை கிளப்பின கல்யாணி, மறுநாளிலிருந்து உடம்புக்குரொம்ப முடியாத மாதிரி அடிக்கடி சோர்ந்து படுத்தாள்.

என்ன விஷயம், உடம்புக்கு என்ன என்று விசாரித்த பிள்ளையிடம் நெஞ்சை அமுக்கிக் கொண்டு 'உடம்புல ஒரு அசதி' என்று முணு முணுத்தாள்.

சுரேஷ் போன் பண்ணி வரவழைத்தகுடும்படாக்டரும் ஏற்கனவே அவளிடம் வாக்குக் கொடுத்துவிட்ட ரீதியில் பலவீனம்; சோர்வு; சந்தோஷம், கல்யாணம் என்று முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு லெக்சர் அடிக்க, நிஜமாகவே அம்மாவின் உடம்பு சரியில்லை என்று நம்பிய சுரேஷ் அவளை திருப்தி பண்ணும் நோக்கில் உடனடியாய் தன் ராக்கூத்தை கொஞ்சம் தவிர்த்தான்

குடிப்பதையும், வெளியில் சுற்றுவதையும், நண்பர் களைச் சந்திப்பதையும், குறைத்து, சமர்த்து பிள்ளையாய் அம்மாவின் அருகிலேயே கூடுமானவரையில் இருந்தான்.

நாலாம் நாள் சொன்ன வாக்கு தப்பாமல் இரண்டு பெண்களின் புகைப் படங்களுடன் மாமா திரும்பி வந்த போது, திட்டம் கச்சிதமாய் செயல்படுவது குறித்து கல்யாணி மகிழ்ந்து போனாள்.

மாமாவைத் தனியாய் அழைத்து, பெண்களின் படங் களைப் பார்த்து, விவரங்களைத் தெரிந்துக்கொண்டாள்.

ஒருத்திபெயர் ரமாமணி. பெற்றவர்களுக்கு இரண்டா வது பெண். பி. யு. சி. படிப்பு, கண்ணுக்கு சுமார். அப்பாவுக்கு விவசாயத்தொழில். வசதியான வாழ்க்கை.



அடுத்தவள் சகுந்தலா. படிப்பு எஸ்.எஸ்.எல்.ஸி., வாத்தியார் அப்பாவுக்கு ஏழாவது குழந்தை, பெரிய குடும்பம்; பார்க்க ரதியாக இருந்தாள்.

கல்யாணியின் ஓட்டு இரண்டாவது பெண்ணுக்கு விழுந்தது.

கண்ணுக்கு அழகாக இருப்பது பிள்ளையை எளிதாக சம்மதிக்க வைக்க உதவும்; ஏழ்மையோடு வதவதவென்று நிறைய குழந்தைகள் இருப்பதால் நாளைக்கு புருஷன் குணம் கெட்டவன், அது, இது என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போனாலும், அவர்கள் இவளை உட்காரச் வைத்து சீராட்டுவார்களா என்பது சந்தேகம்.

மனசுக்குள் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு, மாமாவிடம் பொதுவாக, 'இவ அழகா, பதவிசா தெரியறா... இவளையே முடிச்சுடுவோம்' என்று மட்டும் சொன்னவள், அன்று மாலையே அவரை அருகில் வைத்துக் கொண்டு பிள்ளையிடம் திருமணப் பேச்சை எடுத்தாள்.

எதிர் பார்த்தது போல மகன் ஹாய், ஊய் என்று குதிக்கவே செய்தான்.

'கல்யாணமா? எனக்கா? நோ சான்ஸ்' என்று சொடுக்குப் போட்டு, அலட்சியமாகப் பேசினான். அம்மா சொல்வதைக் காதில் வாங்க மறுத்தான்.

ஆனால், அதிசயமாக இந்த மிரட்டல்களுக்கெல்லாம் கல்யாணி அசைந்து கொடுக்கவில்லை. தன் உடம்பைக் காரணம் காட்டிப் பேசினவள், சகுந்தலாவின் படத்தை அவன் முன் நீட்டி, 'இவளுக்குஎன்னகுறைனு வேணாம்னு சொல்றே? உன் மனசறிஞ்சு நடப்பா, உன் பழக்கவழக்கங் களுக்கு அனுசரிச்சுக்கிட்டு போவா... நல்லா யோசனை பண்ணிப் பாரு' என்று கூறின பிறகும், அவன் தனக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்றுமுரண்டுபண்ணி, கடைசியாக, 'சரி உன் விருப்பம் அதுதான்னா, என்

முடிவையும் நா சொல்லிடறேன். பட்டணத்துல ஒரு பொம்பளை துணை இல்லாம தனியா இருக்க எனக்குப் பிடிக்கலை ஊரோட வந்திடுனு மாமா சொல்றாரு. வீடு, வாசல் எல்லாத்தையும் வித்து பாங்குல பணத்தை போட்டுட்டு, உறவு மனுஷங்களோட போய் நிம்மதியா இருக்குறதைத் தவிர எனக்கு வேற வழி இல்லே. உனக்கு கல்யாணமாயிட்டா மருமக துணையோட உன்சந்தோஷத்துக்காகவேண்டி இங்கயே இருக்கலாம்னு நினைச்சேன். நீ இத்தனை அழும்பு பண்ணா, மேல பேச என்ன இருக்கு?' என்று கூற. ஊரோடு போய் மாமா, இதர உறவினர்களுடன் அம்மா வாழ முற்பட்டால் இந்தசுதந்திரம், இந்த பணம் காசு எதுவும் நிச்சயம் கிடைக்காமல் போய்விடும் என்கிற உண்மை பிரம்மாஸ்திரமாக தாக்க, 'பெரியபெரிய வார்த்தை எல்லாம் ஏம்மா பேசற? உன் சந்தோஷம் எனக்கு மட்டும் முக்கியமில்லையா? உன் விருப்பம் போல செய்' என்று சாதுவாய் பச்சைக் கொடியைக் காட்டினான்.

## 3

முதலிரவு

ஏராளமாய் மல்லிகை.

ஊதுபத்தி புகை.

பழ, பலகார மணம்.

பட்டு வேட்டி, சட்டை.

சட்...



பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டை அணைத்த கையோடு, இன்னொன்றைப் பற்ற வைத்த சுரேஷ் உரக்க 'ஷிட்' என்றான்.

இந்த முதலிரவும், பூவாசனையும் இல்லை என்று யார் அழுதார்கள்?

ஹாய்யாக க்ளப்பிலோ, நண்பன் வீட்டிலோ உட்கார்ந்துகொண்டு கையில் ஐஸ் கட்டிகள் மிதக்கும் ட்ரிங் க்ளாஸை வைத்துக்கொண்டு நினைப்பதை தங்கு தடையில்லாமல் பேசி அட்டஹாஸமாய் சிரித்துப் பொழுதைக் கழிப்பதற்கு இது ஈடாகுமா?

ட்ரிங்க்.

அந்த வெளிர் மஞ்சள் திரவம்.

கண்ணாடி டம்ளரில் தங்கமாய் மின்னும் அமுத பானம்.

நினைத்த மாத்திரத்தில் நாக்கின் அடியில் அரிப்பு எடுக்க, தொண்டையில் ஒருவித வரட்சி உண்டாக, ஹிருதயம் படா படா என்று சப்தத்துடன் அடிக்க முற்பட்டது.

சாதாரணமாய் மணி ஏழுக்கெல்லாம் நண்பர் குழாம் கூடிவிடும். ஒரு சில நாட்கள் அதற்கும் முன்னரே கூட...

மணிக்கட்டைத் திருப்பி மணி என்னவென்று பார்த்தான்.

ஒன்பதரை.

இதற்குள் மூன்று பெக்குகளாவது முழுசாய் உள்ளே போயிருக்க வேண்டும்.

ஓ — ஹெல்...

இந்த முதலிரவும், மல்லிகை மணமும் இல்லை என்று யார் அழுதார்கள்.

நாக்கின் அடியில் தோன்றின நமநம மெள்ள தாடையில் இறங்கி, புஜங்களுக்குப்பரவி, கைகளில் ஊறி, விரல்களை அடைந்தபோது, சன்னமாக உடம்பு உதறி உதறிப் போட்டது

இரண்டு கைகளையும் அழுந்தத் தேய்த்துப் பரபரப்பைக் குறைக்க முயற்சித்து, அதில் வெற்றி காணாமல் எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

ஒரு பெக் — ஒரே ஒரு பெக் குடித்தால் என்ன?

இங்க பாரு சுரேஷ்...இப்ப நா சொல்லறதை கவனமா கேட்கணும். நீ பிறந்த நாளா உனக்காக நா பட்டபாடு, கொஞ்சம் நஞ்சம் இல்லே. உங்கப்பா கோபத்துலேந்து காப்பாத்த அப்பப்போ, பொய் சொல்லக்கூட தயங்கின தில்லே. நீ என்ன தப்பு பண்ணாலும் அதைமூணாம்பேர் தெரிஞ்சுக்கறதுக்கு முன்னால... விழுந்து மறைச்சிருக்கேன் —இதெல்லாம் உன் மனசுக்குத் தெரியும். இது வரைக்கும் நீ எப்படியெல்லாமோ இருந்திருக்கே; பணத்தை தொலைச்சி, வேண்டாத சகவாசத்தால ரொம்ப ஆட்டம் போட்டிருக்கே. நானும் ஒண்ணும் கேட்டதில்லே. போனது போகட்டும்; அத்தனையையும் நாம இரண்டு பேரும் ஒரு கெட்ட கனவா நினைச்சி மறந்துடலாம். உன் சந்தோஷம் எனக்கு எத்தனை முக்கியமோ, அத்தனை என் நிம்மதியும் உனக்குப் பெரிசா இருக்கணும். நீ குடிக்காம இருந்து, ஊர் மெச்ச, நல்ல பிள்ளைனு பேர் எடுத்தா அதைவிட எனக்கு திருப்தி தர்ற விஷயம் வேற ஒண்ணும் இல்லே. இனியும் நீ விளையாட்டுப் பிள்ளையா இருக்கக் கூடாது. உன்னை நம்பி ஒருத்தி வந்துட்டா. அவளுக்காக வாவது நீ மாறணும். இனி அந்த நாசமா போற குடியத் தொடறது இல்லேனு எனக்கு சத்தியம் பண்ணிக் குடு நாம வழிபடற முருகன் மேல ஆணையிட்டுத்



தொட மாட்டேன்னு சொல்லு. நீ சொன்ன வார்த்தை தப்பாம நடந்து காட்டினா, நீ கேக்கறது எதுவானாலும் தயங்காம அள்ளிக் கொடுக்க நா ரெடி. புரிஞ்சிகிட்டியாப்பா?"

சற்று முன் கண்களில் நீர் பெருக கைகளைப் பிடித்துக் கொண்டு அம்மா கெஞ்சியது நினைவுக்கு வர, மீண்டும் சுரேஷ் கட்டிலில் உட்கார்ந்தான்.

அந்த நிமிஷத்தில் உணர்ச்சி வசப்பட்டு அம்மா நீட்டிய கையில் சத்தியம் பண்ணிக் கொடுத்துவிட்டாலும் இப்போது ஏன் அப்படிச் செய்தோம் என்று மனசு கிடந்து அல்லாடியது.

குடித்தால் வரும் குஷியைப்பற்றி இந்த அம்மாவுக்கு என்ன தெரியும்?

ஒரு பெக் உள்ளே போனதும் ஜில்லென்று ஆகாசத்தில் மிதக்கும் சுகம் அனுபவித்தவர்களுக்குதானே புரியும்?

நாக்கில் பட்டு, தொண்டையில் இறங்கி, உள்ளே சரசரவென்று வழுக்கிக்கொண்டு விஸ்கி இறங்கினால்... ஆஹா...

சத்தியத்தின் ஞாபகத்தில் லேசாக அடங்கி நமநம மீண்டும் தலை தூக்க, இப்போது உடம்பின் அவஸ்தை சட்டென்று தாள முடியாததாகிப் போனது.

நாக்கால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

கலைந்து நெற்றியில் விழுந்து முடிக்கற்றையை ஒதுக்கி விட்டான். 'என்னடா பெரிய சத்தியம். இதுவரைக்கும் எத்தனை பண்ணி மீறியிருக்கே, இப்ப மட்டும் கட்டுப் படணும்னு என்ன கட்டாயம்? மீறினா சாமி கண்ணையா குத்திடும்?— நெஞ்சில் ஒலி பெருக்கி ஒன்று காட்டுக்குரலில் அதட்ட, எழுந்து விறுவிறு வென்று நடந்து பாத்ரூமுக்குள் சென்றான்.

க்ளாஸெட் அடுத்திருந்த வாட்டர் டாங்கினுள் கண்ணுக்கு மறைவாய்ப் படுக்க வைத்திருந்த விஸ்கி பாட்டிலை எடுத்துக்கொண்டு படுக்கை அறைக்கு வந்து, கூஜா பக்கத்திலிருந்த டம்ளரில் ஊற்றினான். தண்ணீரை திட்டமாய் விட்டு ஒரே மடக்காய் குடித்தான். வாயும் நெஞ்சும் கபகபத்தன.

ஹா...... இதுவல்லவோ சுகம்.

இப்படி வாட்டர் டாங்கில் புட்டியை ஒளித்து வைத்து விட்டு, தேவையானபோது குடிப்பது ஓரிரண்டு நாட்களாக மட்டுமே தோன்றியிருக்கும் புதுப்பழக்கம்.

இத்தனை வருஷங்களாய் அலமாரியில், மெத்தைக்கு அடியில், புத்தகங்களுக்குப் பின்னால் என்று பாட்டிலை மறைத்து வைத்து இடங்களெல்லாம் அம்மாவுக்கு அத்துப்படி. கண்டிப்பாய் அவைகளைக் கண்டுபிடித்து தூர எறிந்து விடுவாள் என்பதால் 'நா என்னடா செய்வேன் கல்யாணம் ஆனப்புறம் அம்மா ஸ்ட்ரிக்டா இருப்பாளே' எப்படி சமாளிக்கப் போறேன்' — என்று கலங்கினபோது சுந்தர் அபய கரம் நீட்டி, கற்றுக்கொடுத்த புது இடம் இந்தத் தண்ணீர்த் தொட்டி.'

ஏதோ ஒரு கதையில் படித்தானாம் குடிகாரக் கதாநாயகன் யார் கண்ணுக்கும் தெரியமல் டாய்லெட் வாட்டர் டாங்கில் கால், அறை லிட்டர் பாட்டில்களைப் படுக்கவைத்து பரம சௌக்யமாய், வருஷக் கணக்காய் மனைவி கண்ணில் மிளகாய்ப் பொடித் தூவினானாம்— சுந்தர் சொன்னான்.

வாழ்க சுந்தர்.

வாழ்க அந்தக் கதாநாயகன்.

வாழ்க அதை எழுதின எழுத்தாளர்!

வாழ்க அதை வெளியிட்ட பத்திரி...



மாடிப்படிகளில் ஆள் அரவம் கேட்க, சட்டென சுரேஷ் பாட்டிலுடன் பாத்ரூமுக்குச் சென்றான்.

கதவைத் தாளிட்டு, பெரிய வாயாய்க் குடித்து, புட்டியை மூடி டாங்குக்குள் வைத்து, சிகரெட்டைப் பற்ற வைத்து நல்ல பிள்ளையாய் வெளியில் வந்தபோது அறை வாசலில் சகுந்தலா நின்றிருந்தாள்.

புட்டா போட்ட சிகப்பு பனாரஸ் பட்டுப்புடவை

எக்கச்சக்கமாய் நகை...

தலை நிறையப் பூ.

கையில் பால் சொம்பு.

குனிந்தபடி நின்றிருந்தவளை அழுத்தமாய் பார்க்கையில் அந்தச் சிவப்புப் பட்டும் தாழம்பூ நிறமும், கோவில் சிலை மாதிரியான உடற்கட்டும், குமிழாய்ச் சேர்ந்திருந்த உதடுகளும் பார்வையில் விழ, அட, என் பெண்டாட்டி அழகிதான்—என்ற சந்தோஷம் அவன் உள்ளுக்குள் ஜிலு ஜிலுத்தது.

மெதுவாக, கிட்டச் சென்று அவள் தோளை அணைத்து 'வ' என்றான். கூச்சப்படுகிறாள் என்பது புரிய, கதவைத் தாளிட்டுவிட்டு இடுப்பில் கையைக் கொடுத்தபடி நடந்து படுக்கைக்கு அழைத்து வந்தான்.

மிக அருகில் மனைவியைப் பார்க்கும்போது காலையில் தாலி கட்டின நிமிஷத்தில் புலப்படாத அழகு இப்போது ஜொலிக்கிற மாதிரி இருந்தது.

வளைந்த புருவங்கள்

பெரிய கண்கள்.

மேல் உதட்டில் மொட்டு மொட்டாய்ப் பூத்திருந்த வியர்வைத் துளிகள்.

அந்த உதடுகள்...

வழவழவென்று இறங்கின கழுத்து...

அப்புறம்...
என் பெண்டாட்டி ரொம்ப அழகானவள்தான்.

அவள் நீட்டிய பால் சொம்பை வாங்கி டேபிள் மேல் வைத்தவன் முரட்டுத்தனமாய் அணைத்து முத்தம் கொடுக்க, சகுந்தலா அவன் பிடிக்குள் இறுக்கமாய் நின்றாள்.

'பயமா இருக்கா'

'............'

'சொல்லு... பயமா இருக்கா?

'............'

'என்ன பயம்! என்னைப் பார்த்தா முரடனாவா தெரியுது?'

எதற்கும் பதில் பேசாமல் அவள் மிரண்டு நிற்க, சுரேஷ் பிடியைத் தளர்த்தினான்.

படுக்கையில் அமர்ந்து அவளையும், பக்கத்தில் இருத்திக் கொண்டான்.

அந்த நளினமான பெண்மையும், மிரட்சியும், அழகும் அவனுக்குப் புதிதாக இருந்தன.

இதுவரைக்கும் பழகி இருந்த பெண்களிடம் இப்படி ஒரு மென்மையை உணர்ந்ததில்லையாதலால் இந்த அனுபவம் கூடுதலான சந்தோஷத்தைத் தருவதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

அம்மா சொன்னது சரிதான்.

ஆயிரம் இருந்தாலும் தாலி கட்டினவள் என்றால் ஒரு பவித்திரம் இருக்கத்தான் செய்கிறது.

புதுசாய் பூத்த மலரை முகர்ந்து பார்க்கிற மாதிரி...



இந்த பெண்ணுகிட்ட என்ன குறையை பார்க்கறே? கண்ணுக்கு ரதியா இருக்குறா. உன் மனசு போல நடப்பா உன் பழக்க வழக்கங்களுக்கு அனுசரிச்சிட்டுப் போவா...

அதுவும் சரிதான்.

ரொம்ப படிக்காமல், பட்டணத்து வாடை இல்லாமல் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று இவள் வாழ்ந்து விட்டாப் பிரச்சினையே இருக்காது.

இஷ்டப்படி குடிக்கலாம், வெளியில் வாசலில் போகலாம்; பழக்கம் எதையும் மாற்றிக் கொள்ளாமல் அப்படியே இருக்கலாம்.

அது சரி, அப்படி எல்லாவற்றுக்கும் பூம்பூம் மாடு மாதிரி இவள் தலை ஆட்டுவதற்கும் அம்மா சம்மதிப் பாளா?

கால்கட்டு போட்டாயிற்று. இனிமேல் மகன் ஒழுங்காய் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பவன், இவள் அசடாக நடந்து கொள்வதை அனுமதிப்பாளா?

சின்னதாக எரிச்சல் எழ, சுரேஷ் தலையைக் கொஞ்சம் அசைத்து அந்த நினைப்பை உதற முயற்சித்தான்.

வேண்டாத கற்பனை இப்போது எதற்கு?

முதலில் இந்த சகுந்தலா எப்படிப்பட்டவள் என்பதைப் புரிந்துகொள்ளாமல் வீணான அவஸ்தை எதற்கு?

மனைவியை அணைத்திருந்த பிடியை விட்டுவிட்டு, பாத்ரூமுக்குள் சென்று, கதவைச் சாற்றி, ஓசைப்படாமல் டாங்கின் மூடியைத் திறந்து, விஸ்கியை எடுத்து ஒரு வாய் குடித்தான்.

ஆனானப்பட்ட அம்மாவையே வருஷக் கணக்காய் தாக்குப் பிடிக்கையில் இந்தப் பட்டிக்காட்டுச் சின்னப் பெண்ணையா வழிக்குக் கொண்டு வர முடியாது?

முடியும்... நிச்சயம் முடியும்.

யோசித்து புத்திசாலித்தனமாய் நடந்துகொண்டால் நினைத்ததைச் சாதிக்கலாம்.

சுந்தர் என்னமோ திட்டம் சொல்லித் தருகிறேன் என்றானே, மறக்காமல் நாளைக்கே அதைக் கேட்டுவிட வேண்டும்.

இன்னும் ஒரு வாய் ஊற்றிக்கொண்டபோது அடுத்த அறையில் உட்கார்ந்திருக்கும் சகுந்தலாவின் அழகு ஞாபகத்துக்கு வர, உடம்பு பரபரக்கத் தொடங்கியது.

சகுந்தலா எத்தனை அழகாக இருக்கிறாள்.

நாகரீகமாய் உடை உடுத்தச் சொல்லி நாலு பேர் நடுவில் அழைத்துப் போனால் எந்தப் பயலும் வைத்த கண்ணை எடுக்காமல் வெறிப்பான் நிச்சயம்.

அழகோடு நிற்காமல், அம்மா கணக்குப் போட்டிருக்கும் விதத்தில் இவள் சொன்ன பேச்சைக் கேட்பவளாகவும் அமைந்துவிட்டால், எனக்கு ஈடு இணை இனி யாரும் இல்லை.

'அவளைக் கண் கலங்காமல் வைத்துக் கொண்டால் உன்னை ஏன் என்று இனி கேட்கமாட்டேன்' என்று அம்மா சொல்லி இருக்கிறாள்.

அப்புறம் என்ன?

தனக்குத்தானே என்னென்னவோ யோசனை பண்ணிக் கொண்டு அன்றைக்கு மிகுந்த கவனத்தோடு சகுந்தலாவுக்கு இன்பமும், இதமும் தருகிற தினுசில் அவன் நடந்து கொண்டாலும் மறுநாள் மதியம் சுந்தரைச் சந்தித்து, திருட்டுத்தனமாய் குடிப்பது திருப்தி தரவில்லை என்பதை விளக்கி, இதற்கு ஏதாவது தீர்வு உண்டா என்று கேட்க, சுந்தர் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு அவனைப் பதில் கேள்வி கேட்டான்.



'இத்தனை நாளா குடிக்கிற வகைலேயே தொடர்ந்து ட்ரிங்க் எடுக்கணும்னு விரும்பறே, அதானே?'

'அதேதான்!'

'ம்ம...ஐயா ஒரு பிளான் வைச்சிருக்கேன். கொஞ்சம் 'தில்' லோட நடந்துகிட்டா அப்புறம் நீ ராஜாதான்.'

'எனக்கா நெஞ்சழுத்தம் இல்லே?'

'அதுக்கில்லேபா... புது பொண்டாட்டி அழகானவ... நா ஒண்ணு சொல்லப் போயி, நீ தப்பா எடுக்கக் கூடாது பாரு.'

'ப்சி! விஷயத்தைச் சொல்லேண்டா...என்ன பீடிகை இது!'

'சரி, கவனமாக் கேட்டுக்க... நீ குடிக்கறதை உன் பெண்டாட்டி தடுக்காதபடி செஞ்சிட்டா?'

'புரியலை...'

'சினிமா பார்க்க ஆசைப்படற பொம்பளை, தன்னை விட்டுட்டு புருஷன் மட்டும் படத்துக்குப் போய் வந்தா தான் திட்டுவா... தன்னையும் கூட்டிகிட்டு போயிட்டா?'

'அப்படின்னா?'

'அதேதான் சுரேஷ்...நீ மட்டும் ஒண்டியா குடிச்சா தான் உன் பெண்டாட்டி இது தப்புனு சொல்லுவா... அவளையும் பழக்கிட்டா?'

ஒரு நிமிஷம் அதிர்ந்து போனவனாய் சுரேஷ் அமர்ந்திருக்க சுந்தர் அவசரத்துடன் பேசினான்.

'இதுக்குதாம்பா முதல்லியே 'தில்' வேணும்னு சொன்னேன். கேட்டா கேளு, கஷடம்னா விட்டுடு... புருஷன் மட்டும் குடிக்கிற வீட்டுல எல்லாம் ஆயசுக்கும் பிரச்சனைதான், சண்டைதான்... ஆனா, புருஷனும்,

பொண் சாதியும் சேர்ந்து குடிக்கிற இடத்துல வம்பே இல்லே... ஒரு பாட்டில திறப்பாங்க, ஹாய்யா இரண்டு பெக் குடிப்பாங்க. ஜாலியா படுப்பாங்க...நா பாத்திருக்கேன். எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னேன். வேணாம்னா விட்டுடு...'

சுரேஷ் சிகரெட்டைத் தேய்த்து அணைத்தான்.

'நீ பாட்டுக்கு பேசிட்டே போகாதடா...வேணாம்னு நா எங்க சொன்னேன்? நீ சொல்றது நல்ல ஐடியாதான் ஆனா, அவளைக் குடிக்க வைக்கறது எப்படி? அதைச் சொல்லு... கிராமத்துல வளர்ந்த பொண்ணு. அதை மறந்திட்டு பேசாத...'

'கிராமத்துல வளர்ந்ததுதான் இன்னும் சௌகர்யம் நீ சொன்னதை அப்படியே நம்பிடுவா...'

'சரி — மேல சொல்லு...'

'முதல்ல என்னண்ட கொஞ்சம் பணம் கொடு... வீட்டுக்கு போனப்புறம் 'கோலா வாங்கிட்டு வாடானு' ஒண்ணுமே தெரியாதவன் மாதிரி சொல்லு இரண்டு பாட்டில் கோலாவும் ஒரு பாட்டில் 'ரம்'மும் வாங்கி கோலாவத் திறந்து அதுல ரம்மைக்கலந்து மறுபடி பழைய படி மூடிக்கொண்டு கொடுத்திடறேன். நீ தனியா உன் பொண்டாட்டியோட இருக்குறப்போ வெறும் கோலானு சொல்லி, அவளுக்குக் கொஞ்சம் ஊத்திக் கொடுத்திடு. இன்னிக்கு ஒரு க்ளாஸ்னா நாளைக்கு இரண்டு... இப்படி தினமும் பழக்கினா பத்து நாள்ல தன்னால ருசி கண்டுக்கறா எப்படி ப்ளான்?'

பத்தே நாளில் தாலி கட்டியவளை வழிக்குக் கொண்டு வருவதோடு பக்கத்தில் வைத்தபடி பயமில்லாமல், அம்மாவுக்கு நாமம் போட்டு விட்டு ஆனந்தமாய் குடிக்கலாம் என்பது கற்பனையிலேயே பரவசத்தைத் தர, சுரேஷ் முன்னால் சாய்ந்து நண்பனின் தொடையில் தட்டினான்.



'நிஜமாகவே நீ கில்லாடிதான் சுந்தர். இப்ப சொல்லி இருக்கிற ஐடியாவுக்காக உனக்கு இன்னிக்கு முழுபாட்டில் விஸ்கி வாங்கித் தரப் போறேன்...'

சுந்தர் பெருமையுடன் சிரித்தான்.

ஸ்னேகிதன்னு சொல்லிவிட்டு இந்த உதவியக் கூட பண்ணாட்டா எப்படிப்பா?'

'இரண்டு நாளைக்கு பொறுத்துக்கப்பா ... மு'ரய லைனா தேனிலவுக்கு போறப்ப ரம்முக்கு பதிலா பிராந்தி கலந்துக்க; அதுகூட கோலாவோட நல்லாதான் இருக்கும். வேணா ஆரஞ்ச் ட்ரிங்குல ஜின் கலந்து சாப்பிடு...இரண்டு நாள் இப்படி, இரண்டு நாள் அப்படினு தாக்கு பிடிச்சா, பத்து நாள் ஓடிடாதா?'

'இங்கதான் திருட்டுத்தனம் பண்ணி ஏமாத்தணும் ஹனிமூன்ல கூடவா; ஒப்பனா நானும் குடிச்சு' அவளுக்கும் ஊத்தி குடிடினு அதட்டினா என்ன?'

'போச்சுடா... இங்க நீ அவசரப்படக் கூடாது. சகுந்தலா கிராமத்துல வளர்ந்த பொண், மறக்காதேனு சொல்லிட்டு நீயே, அதகாத்துல விட்டுட்டே...குடி, ரேஸ், சீட்டு எல்லாம் நம்ம பொம்பளைங்களைப் பொறுத்த வரை பஞ்சமா பாதகங்கப்பா... விட்டுத்தான் பிடிக்கணும். குடிக்கறோம்ன்றது தெரியாம அவளைப் பழக்கிட்டா, அப்புறம் உண்மை தெரிஞ்சாலும் கவலை இல்லே...முத ஒரு மாசமாவது நீ கவனமா, உங்கம்மா காதுக்கோ, மத்தவங்களுக்கோ விஷயம் போகாம ஜாக்கிரதையா இருக்கிறதுதான் நல்லது...' சுரேஷ் வாயில் இருந்த சிகரெட்டிலேயே இன்னொன்றை பற்ற வைத்து, சிறுத்துப் போய்விட்ட முதலாவதை வீசி எறிந்தான்.

'கஷ்டம்தான். ஆனா, பரவாயில்லே... சொஞ்ச நாள் தானே...சமாளிச்சிடுவேன். வா டா கிளப்பலாம். நாழியாச்சு...நேரத்தோட வீட்டுக்குப் போகலைனா அம்மா, மாமா ஏழுறைப்பாங்க.'

வீட்டுக்குப் போய் அம்மா, இதர உறவினர்களோடு அமர்ந்து காபி, பலகாரம் சாப்பிட்டு, அதிகம் பேசாமல் புன்னகையுடன் இருந்து, கோவிலுக்குச் சென்று வர வேண்டும் என்று விரும்பிய அம்மாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய உடனே மனைவி, அம்மாவுடன் சென்று, வந்து...

ரொம்ப அடக்கம்தான்... ரொம்ப சமர்த்துதான்...

'ஒரே நாள்ல பையன் ருசி கண்ட பூனையா எப்படி வாலைச் சுருட்டிக் கிட்டான் பாரு' —என்று மாமா பெருமை பேச்சு பேச கல்யாணியும் தங்கமான பிள்ளையை தவறாக எண்ணிவிட்டோமோ என்று வருந்தவே செய்தாள்.

எட்டு மணி சுமாருக்கு சாப்பாடு ஆனதும் அம்மாவைத் தனியாய் அழைத்து 'தப்பா எடுத்துக்காதம்மா அப்பப்ப குடிக்க பழகிட்டதுல நாக்கு அடிக்கடி வரண்டு போகுது. சுந்தரைவிட்டு நாலு கோலா வாங்கி வரச் சொல்லி, ஐஸ் போட்டுக் குடிச்சுக்கட்டுமா?' என்று வினயத்துடன் கேட்க, ஏற்கனவே உண்டாகி இருந்த வருத்தத்தோடு இப்போது நெகிழ்ச்சியும் சேர்ந்துக் கொள்ள, தானே சுந்தரைக் கூப்பிட்டு, பணத்தைத் தந்து, 'உசத்தியன கோலாவும், அவனுக்குப் புடிச்ச வறுத்த கோழியும் வாங்கி இரண்டாம் பேர் அறியாம மாடி அறைல கொண்டு வைச்சிடு தம்பி. பாவம் சுரேஷ்? அவனுக்கு சைவ சாப்பாடு ஒரு வேளை இறங்காது. கல்யாண வீட்டுலே அசைவம் சமைக்க வேணாம்னு இரண்டு நாளா சைவம் செய்யறதுல பிள்ளை சரியாவே சாப்பிடலை. புது மாப்பிள்ளைக்கு உடம்புல தெம்பு வேணாம்?' என்று கரிசனத்தோடு கூறி, அனுப்பி வைத்தாள்.



திட்டமிட்டபடி எல்லாம் நடக்க, சகுந்தலாவும் எதிர் பார்த்ததை விடவும் ரொம்ப சாதுவாய் இருக்க, அன்றைக்குத் துளிகூட சிரமம் இல்லாமல் கோலா என்று சொல்லி ரம் கலந்த பானத்தை மனைவியிடம் கொடுத்து 'என்னங்க இது காரமா இருக்கு' — என்று சின்னக்குரலில் அவள் கெஞ்சியதைக் காதில் வாங்காமல் முழு டம்ளரையும் குடிக்க வைத்து, நினைத்ததை சுரேஷ் கச்சிதமாய் சாதித்துக்கொண்டான்.

## 4

இரண்டாம் நாள்:

'என்னங்க?'

'ம்?'

'இன்னிக்கும் இந்தக் கோலாவ குடிக்கணுமாங்க?'

'ஏன் — உனக்குப் பிடிக்கலியா?'

'வந்து... வந்து...'

'சொல்லு... என்னண்ட என்ன பயம் டார்லிங்?'

'இல்லே... ஒரு மாதிரி காரமா இருக்குதுங்க... குடிச்சா நெஞ்சுல பகபகனுது... அதான்...'

'இது உசத்தி கோலா சக்கு... டபிள் செவன். ஒரு 'இதுக்காக கொஞ்சம் விறுவிறுப்பு சேர்த்திருக்காங்க. சமையல்ல பச்சை மிளகா சேர்க்கறதில்லையா' அந்த மாதிரி தான் சும்மா சாப்பிடு; பத்து நிமிஷத்துல ஜிங்குனு இருக்கும்.'

'எங்க ஊர்ல ஒருதரம் கோலா சாப்பிட்டிருக்கேன், அது இந்த மாதிரி இல்லேங்க...'

'அது நாட்டுத் தயாரிப்பு... கோலி சோடா மாதிரி... காசுக்கு ஏத்த ரகம். ஒரு கிளாஸையும் குடிச்சிட்டியே... இன்னும் கொஞ்சம் ஊத்தவா?'

'அய்யோ — வேணாங்க... இதுவே வயித்த என்னவோ பண்ணுது... இப்பத்தான் சாப்பிட்டேன், அதுக்குள்ளார பசி எடுக்குற மாதிரி இருக்குது...'

வெட்கத்துடன் பேசிய சகுந்தலா உதட்டை சுழித்துச் சிரித்தாள்.

சிரித்தவள் கண்களில் லேசாக போதைப் பனிபடர்கிற மாதிரி தோன்ற, எட்டி அவளை இழுத்து சுரேஷ் அணைத்தான்.

'விடுங்க, ரொம்ப வெளிச்சமா இருக்குது.'

'உன் அழகை இருட்டுல எப்படி சக்கு ரசிக்க முடியும்?'

'போங்க...'

கொஞ்சலாய் முணுமுணுத்தவள் அவன் மார்பில் சாய, சுரேஷ் இன்னொரு கிளாஸ் ஊற்றிக் கொண்டான்.

நாலாவது நாள்:

'சக்குகண்ணா. அந்தக் கூடைய இப்படி எடுத்துவை டார்லிங்...'

கணவனின் கொஞ்சல் காதுகளில் சூடேற்ற, குனிந்து ஸீட்டுக்கடியில் இருந்த கூடையை சகுந்தலா வெளியில் இழுத்தாள்.

உள்ளே நாலு தம்ஸ் அப் பாட்டில்கள்.



'என்னங்க... ஓடற ரயில்ல கூடவா 'கோலா' குடிக்கணும்!'

'நாள் பூரா இங்க, அங்க போயி அலைஞ்சிகிட்டு இருந்தேனா, அதுல தொண்டை சுத்தமா வரண்டு போச்சு கண்ணம்மா... ம்ம்... எடு... எடு!'

லேசாக சுந்தர் மூடியிருந்ததைத் திறந்து இரண்டு டம்ளரில் ஊற்றுகையில் சகுந்தலா தயக்கத்துடன் பேசினாள்.

'எனக்கு வேணாங்க. தயவு பண்ணி விட்டுடுங்க...'

'என்னமோ தப்பு தண்டா பண்றமாதிரி என்ன சக்கு தினமும்! என் இஷ்டத்துக்காகவாவது கொஞ்சம் எடுத்துக்கயேன்.'

கணவன் குரலில் எரிச்சல் தட்டுப்படுகிறதைப் புரிந்து கொள்ள முடிய சகுந்தலா அவசரமாய், 'குடுங்க சும்மா தமாஷுக்கு வேணாம்னு சொன்னேன்' என்றாள்.

சுரேஷ் டம்ளரை அவளிடம் நீட்டிவிட்டுச் சிரித்தான்.

கூபே...

அழகான மனைவி...

மனம் போல ட்ரிங்க்ஸ்...

கொஞ்சம் குரலை எழுப்பினால் சகுந்தலா தழைகிறாள் என்பது தெளிவாக, அன்றைக்கு அவளை இரண்டு டம்ளர் 'ரம்' மை குடிக்க வைத்தான்.

ஐந்தாம் நாள்:

'குட் மார்னிங் டார்லிங்... எழுந்து ரெடி ஆகறியா? நாம இறங்க வேண்டிய ஸ்டேஷன் அரை மணியில வந்திடும்...'

கண்களை விழித்த சகுந்தலா அசதியுடன் நெற்றியில் கையை வைத்து அழுத்தினாள்.

யாரோ கல்லை கட்டிவிட்ட மாதிரி தலை கனத்தது.

'ஏய்... நேத்து ராத்திரி என்ன அத்தனை குஷி உனக்கு?;

முதல் நாள் இரவின் நடப்புகள் ஞாபகத்தில் முட்ட சகுந்தலா வெட்கினாள்.

'போங்க.'

'எங்க போறது... அரை மணில இறங்கணும் இல்லேனா உன்னை...' நெருங்கி முரட்டுத்தனமாய் அணைத்தவனை யோசனையுடன் ஏறிட்டாள். 'தலைய ரொம்ப வலிக்குதுங்க... பாரமாகூட இருக்கு.'

'ரயில் ஆட்டத்துல சில பேருக்கு இப்படித்தான் இருக்கும். நீ எழுந்து தயாராகு.'

எட்டாம் நாள்:

அறையின் கதவை பூட்டிக் கொண்டு இருவரும் ஹோட்டலின் டைனிங் ஹாலுக்கு வந்து அமர, சர்வர் பவ்யமாய் வணங்கி வரவேற்றான்.

'குட் மார்னிங் ஸார்!'

'குட் மார்னிங்.'

அவன் நீட்டிய மெனு கார்டை பெற்றுக் கொண்ட சுரேஷ், 'வழக்கம்போல அம்மாக்கு டொமடோ ஜூஸும் எனக்கு லாகர் பியரும் கொண்டு வந்திருங்க' என்றதும் வெயிட்டர் அவைகளைக் கொணர்ந்து வைத்தான்.

அங்கு வந்த முதல் நாள் இப்படி சுரேஷ் ஆர்டர் செய்ததும், நுரைத்துக் கொண்டு மஞ்சளாய் வந்த திரவத்தைப் பார்த்து சகுந்தலா குழம்பினாள்.



'என்னங்க அது?'

'லாகர் பியர்'

'அப்படின்னா?'

சுரேஷ் விஷமமாய் கண்களைச் சிமிட்டினான்.

'புதுசா கல்யாணமான ஆம்பிள்ளைகளுக்கு ரொம்ப நல்லது. ஒரு பாட்டில் சாப்பிட்டா, டானிக் மாதிரி ஜம்முனு இருக்கும்; புரியுதா?'...

சகுந்தலா கன்னங்கள் சிவக்க, தலையைக் குனிந்துக் கொண்டாள். வெயிட்டர் பக்கத்தில் நிற்கும்போது ஐயோ... கடவுளே!

ஆர்டர் எடுத்துக்கொண்டு அவன் நகர்ந்ததும் சுரேஷ் நெருங்கி வந்து கேட்டான்.

'ஆமாம். ஏன் அப்படி கேட்டே?'

'சும்மா தாங்க.'

'அ...இதானே வேணாங்கறது. கவலையோட கேட்ட மாதிரி இல்லே இருந்துச்சு!'

'நா வேற ஏதோனு நினைச்சி பயந்திட்டேங்க...'

'ஏதோன்னா?'

'சினிமாவுல காட்டுவாங்களே, அதுனு நினைச்சி...'

சிகரெட்டில் உள்ள சாம்பலைத் தட்டின சுரேஷ் 'அம்மா உன்னண்ட ஏதாவது சொன்னாங்களா?' என, எதுவும் புரியாமல் சகுந்தலா விழித்தாள்.

'எதுப் பத்தீங்க?'

'பொதுவா தான்...'.

'ஒண்ணும் சொல்லலியே...'

'நா கொஞ்சம் முரடன், அது, இதுனு கூடவா?'

சின்ன குழந்தையின் முகபாவத்தோடு அவள் விழிக்க, அம்மா தன் குடிபழக்கத்தைப்பற்றி மனைவியிடம் எதுவும் சொல்லவில்லை என்பது புது தைரியத்தைத் தந்ததால் அன்றைக்கு ரம்மிலிருந்து ஜின்னுக்கு சுரேஷ் தாவினான்.

பெட்டிக்கடியில் சுந்தர்முன் ஏற்பாடாய் வைத்திருந்த ஜின் புட்டியை எடுத்து சகுந்தலா அறியாமல் பணியாளை அழைத்து பத்து ரூபாய் பணத்தோடு கொடுத்து ஆரஞ்சு பானத்தில் திட்டமாய்க் கலந்து வர ஏற்பாடு பண்ண, 'கோலாவை விட எனக்கு ஆரஞ்சு பிடிச்சிருக்குங்க...' என்றபடி சகுந்தலா தயங்காமல் இரண்டாவதுக்ளாஸைப் பருகினாள்.

பத்தாம் நாள் :

என்னங்க... இன்னிக்கு ஆரஞ்சு ஜூஸ் ஆர்டர் பண்ணலியா?'

'செய்யணுமா?'

'இல்லே, நாள் தப்பாம தாகமா இருக்குனு சாப்பிடு வீங்களேனு கேட்டேன்.'

'சக்கு, இங்க வாயேன். இன்னும் கிட்டக்க...நா ஒண்ணு கேட்டா, மறைக்காம பதில் சொல்லணும், சரியா?'

'கேளுங்க...'

'இப்ப ஆரஞ்சு ஜூஸ் வேணும் போல உனக்கு இருக்கா?'

'அப்படி ஒண்ணுமில்லேங்க'

'சத்தியமா?'

'அய்ய... இதுக்கெல்லாமா சத்தியம் போடுவாங்க?'



'சொல்லு கண்ணம்மா.'

'தினம் சாப்பிடுவோமேனுதான் கேட்டேன்ங்க.'

'நா கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லலை...'

நீங்க சொல்ற மாதிரி அதைச் சாப்பிட்டா தாகம் அடங்குது, பசிக்குது, தூக்கம் வருது. அதான்.'

'அப்ப, உனக்கும் பிடிச்சிருக்கு.'

'..........'

'பதில் சொல்லும்மா.'

'ம்'

'அவன் சந்தோஷத்தோடு கைகளைத் தட்டினான்.

'இப்பத்தான் நீ எனக்குப் பிடிச்ச பெண்டாட்டியா இருக்குறே...இதை ஸெலிப்ரேட் பண்ண, கடைத் தெரு வுக்குப் போயி உனக்கு ஒரு புடவை வாங்கப்போறேன்... ம்ம்...கிளம்பு...'

'எதுக்குங்க...வீண்செலவு? கல்யாணத்தப்போ அத்தை வாங்கித் தந்த புடவைகளையே நா இன்னும் சரியாபிரிச்சு கட்டலை...'

'கிளம்பப் போறியா இல்லியா?'

அன்றைக்கு கணவன் வாங்கித் தந்த புடவை, செண்ட் அணிந்த உற்சாகத்தோடு அவன் தன்னைப் பாராட்டிப் பேசியதும் தனி திருப்தியைத் தர, ஹோட்டலுக்குத் திரும்பியதும் 'பெல் அடிச்சு, ஜூஸ் கொண்டு வரச் சொல்லுங்க' என்று வலிய கூறியவள் சிரித்துக்கொண்டே படுக்கையில் சாய்ந்தாள்.

## 5

பிரஷில் பற்பசையைத் தடவி, வாய்க்கு எடுத்துச் சென்ற நிமிஷத்தில் முதல் நாள் அத்தை கேட்ட கேள்வி காரணமில்லாமல் நினைவுக்கு வர, கையை சகுந்தலா தழைத்துக் கொண்டாள்.

சமையல்கட்டில் வேலையாயிருந்தவளின் அருகில்சென்று நின்று 'அத்தானுக்கு காபி கலந்து தறிங்களா அத்தே?' என்றதும் கல்யாணி ஒரு தரம் மூச்சை வேகமாக இழுத்து விட்டு''அது என்ன நாத்தம்?,,என்றாள்.

'எது அத்தே?'

'நீ வந்து நின்னதும் கும்முனு வீசுதே... உனக்குப் புரியலை?'

'ம்ஹூம்...'

'பல் விளக்கிட்டியா?'

'விளக்கிட்டேனே...'

'என்னமோ நாத்தம்... என்னனு சொல்லத் தெரியலை.'

கல்யாணி புருவங்களை சுருக்கிக் கொண்டு யோசனை பண்ணிவிட்டுக் கேட்டாள்.

'ராத்திரி நா படுக்க போனப்புறம் சுரேஷ் வெளில எங்கயாச்சும் போயிட்டு வந்தானா?'

'இல்லையே அத்தே...'

வெகுளியாய்ப் பதில் கூறுபவளிடம் மேற்கொண்டு எப்படிக் கேட்பது என்று புரியாமல், அவர்கள் வெளியில்



எங்காவது போயிருக்கும் தருணத்தில் மாடி அறையை நன்றாகச் சோதனை செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்த கல்யாணி, பேச்சை அத்துடன் நிறுத்திக் கொள்ள. அத்தை எதற்காக அப்படிக் கேட்டார் என்று விளங்காமல்தான் நின்றதை இப்போது சகுந்தலா நினைத்துப் பார்த்தாள்.

ஒருவேளை சிகரெட் புகையின் நாற்றம் என் உடையில் ஏறி இருந்திருக்குமோ?

அத்தான் புகைவண்டி கணக்காய் சிகரெட் பிடிப்பதால் நிச்சயம் நம் மேலும் அந்த வாடை தொற்றிக் கொள்ளாமலா இருக்கும்?

யோசனை மாறமல் நன்றாகப் பல் விளக்கி, முகம் கழுவி, துளி செண்டை மேலே தெளித்துக்கொண்டு கீழே இறங்கிப் போக, மருமகளிடமிருந்து முதல் நாள் வீசிய நாற்றம் இன்றைக்கு இல்லாமல் இருந்ததில் கல்யாணிக்கு 'அப்பாடி' என்று ஆனது.

நான்தான் தவறாகக் கற்பனை பண்ணிக்கொண்டு விட்டேன்.

என் பிள்ளை தங்கம்.

கல்யாணமாகுமுன் ஏதோ இப்படி அப்படி இருந்திருக்கலாம்; ஆனால் இப்போது அத்தனையும் விட்டு விட்டுச் சமர்த்தாய் வீட்டோடு இருக்கும் பிள்ளையைத் தப்பாக நினைப்பது அநியாயம்.

தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு, திட்டமிட்டது போல மகனின் அறையைச் சோதனை பண்ணாமல் கல்யாணி இருக்க, அம்மா, பெண்டாட்டியை சுச்சிதமாய் சுரேஷ் ஏமாற்றுவது தொடர்ந்து நடந்தது.

காலையில் பத்துக்குள் என்று பேர் பண்ணிவிட்டு, மணி பன்னிரண்டுக்கெல்லாம் க்ளப்பிலோ, சுந்தரின் வீட்டிலோ நண்பர்கள் கூடுவார்கள். அமர்க்களமாய் ட்ரிங்க்ஸ் சகிதம் சீட்டுக் கச்சேரி நடக்கும். நாலு மணிக்கெல்லாம் குளித்து செண்ட் பூசி, தாம்பூலம் தரித்து, இந்தப் பூனையும் பாலைக்குடிக்குமா என்கிற ரீதியில் டாணென்று ஐந்து ஐந்தரைக்கெல்லாம் வீட்டில் ஆஜராகி மனைவியோடு சினிமா, நாடகம் என்று சென்றுவருவான். வெள்ளிக்கிழமைகளில் அம்மாவையும் அழைத்துக்கொண்டு பக்தி சிரத்தையாய்க் கோவில்களுக்குக்கூட போய் வருவான்.

மதியம் ஆசை தீர விஸ்கி அருந்தி விடுவான் ஆதலால், இரவு படுக்கப் போகும் முன் மனைவியோடு கோலா கலந்த ரம், அல்லது லைம் கார்டியலுடன் கூடிய ஜின் என்று குடிப்பதில் அவனுக்கு அதிகமாக ஆட்சேபணை இருப்பதில்லைதான்.

இப்படி ஒரு மாசம்...

கல்யாணமாகி நாற்பது நாட்கள் போல ஆகி, அன்றாடம் மனைவியும் தனக்குச் சமமாய் குடிக்கப் பழகி விட்டாள் என்ற தைரியம் வந்த பிறகு, சுந்தரின் தூண்டுதலோடு ஒருநாள் ப்ரிஃப் கேஸில் விஸ்கி, சோடா பாட்டில்களை அடுக்கி வீட்டுக்கு எடுத்து வந்தான்.

''ஆபிஸ்ல வேலை பண்ணிட்டு வர்றது அலுப்பா இருக்கும்மா... சாப்பாட்டை ஹாட் கேஸ்ல போட்டு ஏழுமலைய வைச்சிடச் சொல்லுங்க... வீடியோ படம் பார்த்திட்டு நாங்க லேட்டா சாப்டுட்டு படுக்க வசதியா இருக்கும். எதுக்கு உங்களுக்கெல்லாம் வீண் தொந்தரவு?'

பொறுப்பு மிகுந்த குரலில் ஒருதரம் மகன் இப்படிச் சொன்னதில் நியாயம் இருப்பதாக எண்ணிக்கொண்டு கல்யாணி சம்மதித்ததில் பத்துப் பதினைந்து நாட்களாய்



ஒன்பது மணி சுமாருக்கு ஏழுமலை ஹாட் கேஸில் சாப்பாட்டைச் சூடாக எடுத்து வைத்து, அடுக்களையை ஒழித்து விடுகிறான்.

வெளியில் போய் வந்துவிட்டோ, வீடியோவில் படம் பார்த்துக் கொண்டிருந்து விட்டோ, பத்து, பதினொன்றுக்கு சகுந்தலா கீழே வந்து ஹாட் கேஸ் தட்டுக்களை மாடிக்கு எடுத்து வர, இருவரும் ஒன்றாய்ச் சாப்பிட்டுவிட்டுப் படுப்பார்கள்.

அம்மாவைக் காலைவரையில் சந்திக்கத் தேவையில்லை என்பது தனி துணிச்சலைக் கொடுத்ததும் இன்று விஸ்கியை வீட்டுக்கு சுரேஷ் எடுத்துவர ஒரு காரணம்தான்.

வீடியோவில் ஆங்கிலப் படத்தை ஓடவிட்டு விஸ்கியையும், சோடாவையும் எடுத்து டேபிள்மேல் வைத்தான்.

'என்னங்க இது?'

'எது?'

'இதுதான்...'

'விஸ்கி...'

'கு...குடியா?'

'ம்ம்'

'இதெல்லாம்கூட நீங்க குடிப்பிங்களா?'

'ஏன்? கூடாதா டார்லிங்? தப்பா?'

ரொம்ப நிதானத்தோடு அவன் சிரித்துக்கொண்டு வினவ, சகுந்தலா மௌனித்தாள்.

'நீ பயப்படற மாதிரி இது ஒண்ணும் தப்பான காரியம் இல்லே சக்கு... டம்ளர்களை எடு. முந்திரிப் பருப்பை தட்டுல கொட்டி வை.'

'எனக்கு வேணாங்க...நீங்க குடிக்கறதே தப்புனு நா நினைக்கறேன்.'

'நிச்சயமா வேணாமா?

'நிச்சயமா.'

'அப்ப சரி, ஒரு க்ளாஸ் மட்டும் எடு.'

'அத்தைத்குத் தெரிஞ்சா வருத்தப் படுவாங்க '

'தெரிஞ்சா தானே?'

மனைவியை இழுத்து அணைத்து பக்கத்தில் இருத்திக் கொண்டு, உல்லாசமாகப் புன்னகைத்த சுரேஷ், 'அவங்களுக்கு எப்படித் தெரியும் டார்லிங். நாம இரண்டு பேரும் சொல்லப் போறதில்லை. அப்புறம்?' என, சகுந்தலா பயத்தில் எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

'வேணாங்க... ரொம்ப கெட்ட பழக்கம்னு பெரியவங்க சொல்வாங்க.'

'அவங்க தெரியாம பேசறாங்க சக்கு. பணக்கார பிள்ளைங்களுக்கு இது ஒரு கெளரவம், தெரியுமா?'

'பேசாம, வழக்கம் போல கோலா, ஆரஞ்சு ஏதாவது சாப்பிடக் கூடாதா?'

சுரேஷ் தலையை பின்னுக்கு சாய்த்துக்கொண்டு சிரித்தான்.

'இது தப்பு, அது தப்பில்லேனு நினைக்கற உன்னை விட வடிகட்டின அசடு வேற யாரும் இருக்க முடியாது டார்லிங்.'

அந்தக் கேலியும் சிரிப்பும் எதற்காக என்று புரியாமல் அமர்ந்திருந்தவளின் முகத்தருகில் அவன் குனிந்தான்

'கொஞ்சம் சாப்பிடும்மா.'



'அய்யய்யோ...நா மாட்டேங்க.'

'எனக்காக...உன் புருஷனோட சந்தோஷத்துக்காக.'

'வேணாங்க. தயவு பண்ணி விட்டுடுங்க.?

'அப்ப, ஆரஞ்சு குடிக்கறியா?'

'ம்...'

சுந்தர் சொல்லிக் கொடுத்திருந்தபடி ஏற்கனவே கலந்த பானத்தை அவளுக்குத் தராமல், கண்ணெதிரில் ஒரு கிளாஸில் ஜின் விட்டு, மேலே ஆரஞ்சு ஜூஸை விட, 'அது என்ன முதல்ல வெள்ளையா ஊத்தினீங்க?' என்றாள் சகுந்தலா கலவரத்துடன்.

'ஜின்'

'அப்படின்னா?'

அதுவும் ஒருவகை ட்ரிங்க் தான்.'

'அய்யோ—எனக்கு அது வேணாங்க. வெறும் ஜூஸ் கொடுங்க போதும்.'

'இத்தனை நாளா நீ குடிச்சது இதைத்தானே டார்லிங்.'

'என்னது?'

'முதல்லியே பாட்லில்ல கலந்து வைக்காம உனக்கெதிர்ல தனித்தனியா கலந்திருக்கேன். தட்ஸ் ஆல்.'

'பொய்...நா நம்ப மாட்டேன்.'

'ஒருவாய் குடிச்சு பாரு... புரியும்.'

'நா மாட்டேன்.'

சுரேஷின் தாடைகள் இறுகின.

'குடிக்கப் போறியா இல்லியா?'

'வேணாங்க தயவு பண்ணுங்க '

'டேஸ்ட் பண்ணி பாருனு சொல்றதைக் காதுல வாங்காத அளவுக்கு பெரிய மனுஷியாயிட்டியா?'

'...'

அவன் கண்களில் கோபம் எட்டிப் பார்த்ததும் சகுந்தலா மறு பேச்சில்லாமல் டம்ளரை எடுத்து சுவைத்தாள்.

ருசியில் மாற்றம் எதுவும் இல்லை.

அப்படியென்றால் இத்தனை நாட்கள் ரசித்துக் குடித்ததெல்லாம் வெறும் ஜுஸ் இல்லையா?

ஏமாற்றமும் அதிர்ச்சியும் ஒன்றாகக் கலந்து அழுகையாக வெடிக்க, இரண்டாக மடிந்து சகுந்தலா அழ முற்பட, 'ஏய்' என்று அடிக்குரலில் சுரேசு அதட்டினான்.

'ஜுஸ் வேணும், ஜுஸ் வேணும்னு அடம் பண்ணி வாங்கி குடி குடிச்சிட்டு, இப்ப என்ன மாமாலம் இது?ம்?'

'நீ... நீங்க என்னை ஏமாத்திட்டீங்க. வெறும் ஜுஸ்னு நம்ப வைச்சி... எ... என்னை என்னை...'

'சரி, ஏமாத்தினேன் தான். ஆனா உனக்குப்புடிச்சுது இல்லே'. அப்புறம் என்ன?'

'அய்யோ! இதுனு தெரிஞ்சிருந்தா நா விரலால தொட்டிருக்க மாட்டேன்.'

'சப்பு கொட்டிகிட்டு குடிச்சதுல குறைச்சல் இல்லே... இப்ப பெரிசா பேசறா.'

'அய்யோ...நா என்ன பண்ணுவேன். முருகா.' முழங்கால்களில் முகத்தைப் பதித்து அழுபவளைப் பார்க்கப் பாவமாக இருக்க, இரண்டு நிமிஷங்கள் கழித்து சுரேஷ் அவளை நெருங்கி உட்கார்ந்தான்.



'புருஷனுக்குப் பிடிச்சதை செஞ்சதுக்கு எதுக்காக இத்தனை வருத்தம்?'

அணைத்த கையை சகுந்தலா உதறினாள்.

'என்னைத் தொடாதீங்க. நீங்க பொய் சொல்லி என்ன ஏமாத்திட்டீங்க, நா இப்பவே போய் அத்தைக் கிட்ட எல்லாத்தையும் சொல்லப்போறேன்.'

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்ட சுரேஷ் கேலியாய்ச் சிரித்தான்.

'என்னது?'

'இந்த மாதிரி நீங்க தப்பு பண்ணறீங்கனு.'

'அப்ப, விரும்பி தினமும் இரண்டு க்ளாஸ் நீ சாப்பிட்டதையும் சொல்லுவே தானே?'

'நீங்க பொய் சொல்லி என்னை ஏமாத்தினீங்க. நா. நா...'

அவள் பேசுவதைக் காதில் வாங்காமல் சுரேஷ் வக்கரமாய்ப் புன்னகைத்தான்.

'நீ எங்கம்மாகிட்டே சொல்லு. நா உங்கம்மா வீட்டு மனுஷங்க எல்லார்கிட்டயும் நீ சப்பு கொட்டிகிட்டு விதவிதமா குடிச்சதைச் சொல்றேன், சரியா?'

அவன் கூறியதை நம்ப முடியாமல் சகுந்தலா கண்களை விரித்து அரண்டாள் பின், குரல் எடுத்து அழ முற்பட்டாள்.

'இந்த நடிப்பெல்லாம் என்னண்ட வேணாம். எனக்கு பிடிச்ச மாதிரி இருக்கறதுன்னா இரு — இல்லேன்னா மூட்டைய கட்டிட்டு நட'— மூர்க்கமாய் சுரேஷ் அதட்டிய போது அவள் அழுகை கூடியதே ஒழிய குறையவில்லை.

அன்றைக்கும், அடுத்த நாளும் செய்வதறியாது தனிமையில் கண்ணீர் வடித்துப் புலம்பிய சகுந்தலா மாமியாரை, சமாளிக்க காய்ச்சல், தலைவலி என்று மாடியிலேயே படுத்துக் கிடந்தாள்.

மூன்றாவது நாள், புருஷன் பாதையில் சென்று அவன் விருப்பப்படி நடப்பதைத் தவிர, தனக்கு வேறு வழியில்லை என்று தீர்மானித்ததோடு கிட்டதட்ட ஒண்ணரை மாசங்களாய் சாயங்காலக் குடிக்கு அடிமையாகி, ஒரு சுகமான உணர்வுடன் உறங்கிப் பழகிவிட்ட உடம்பு 'மிதமாக குடிப்பதில் தவறு என்ன? சந்தோஷத்துக்குச் சந்தோஷம் புருஷனிடம் நல்ல பேருக்கும் பஞ்சமில்லை-என்று வாதாடியதில் வெட்கம், மானம், சரி, தவறு எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு, இரவு அவன் குடித்த போது இன்னொரு டம்ளரை எடுத்து அவன் முன் வைத்துவிட்டு, பக்கத்தில் மௌனமாக அமர்ந்தாள்.

## 6

'நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க!

கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!

ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!

ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க...'

தொடர்ந்து சிவபுராணப் பாராயணத்தில் புத்தி போகாமல், சில நாட்க்ளாய் கசமுசா வென்று உறுத்தும் விஷயத்துக்குத் தாவியது.



காலையில் தூங்கி எழுந்து கீழே வரும் மருமகளிடம் என்னமோ நாற்றம்; கண்களில் ஒருஜிவுஜிவுப்பு...முகத்தில் நீர் கோத்த மாதிரி உப்பல்.

இரண்டு தரம் 'என்னடி விஷயம்?' என்றால் மறுநாளிலிருந்து பொழுதோடு எழுந்து வராமல்' தலைவலி, காய்ச்சல், உடம்புவலி' என்று படுத்துவிடுகிறாள்.

உடம்பு நிஜமாகவே சரியில்லையா?

ராத்திரி நேரத்தில் சுரேஷ் அவளைத் தூங்க விடாமல் ரொம்பவும் கூத்தடிக்கிறானா?

'ஏன் முகம் உப்பி இருக்கிறது?, கண் சிவந்திருக்கிறது?' என்றால், 'ராத்திரி இரண்டு படம் வீடியோல பார்த்தோம் அத்தே—அதான்' என்கிறாள்.

சரி, அப்படியே வைத்துக்கொண்டாலும் ஒருநாளைப் போலவா?

அப்புறம் அந்த நாற்றம்?

அழுத்திக் கேட்டால் எழுந்த கையோடு குளித்து செண்ட் பூசிக்கொண்டு வருகிறாள்...

எதற்காக விடிகாலை வேளையில் குளியல்?

எதை மறைக்க செண்ட் வாசம்?

தாறு மாறாய் ஓடிய எண்ணங்களை வலுக்கட்டாயமாய் ஒரு நிலைப்படுத்தும் உத்தேசத்துடன் மீண்டும் கல்யாணி புத்தகத்தில் கவனத்தைச் செலுத்தினாள்.

'வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க,
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க!
கரங் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க'

முன்பெல்லாம் அவன் குடித்துவிட்டு, போதையுடன் வருகையில் இப்படி ஒரு நாற்றம்தானே எழும்!

அப்படியென்றால்?

சுரேஷ் மீண்டும் குடிக்கிறானா?

இரவு மாடியில் என்ன நடக்கிறது?

சீ... இது வேண்டாத கற்பனை; அவன் இப்போதெல்லாம் குடிப்பதே இல்லையே...கோவில், குளம், ஆபீஸ்,வீடு என்று ஒழுக்கமாய் இருக்கும் பிள்ளையைப்பற்றி இப்படித் தவறாக பெற்றவளே நினைக்கலாமா?

கூடாது. கூடாது...

என்னப்பனே நமச்சிவாயா...மனதை அலையவிடாதே! ஆண்டவனே...

'ஈசன் அடிபோற்றி, எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி, சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!'

அவளது வாய் மட்டும் பாராயணத்தைச் செய்ய, சிந்தனைபோன மாசம் நடந்த ஒருசம்பவத்தை அலசியது.

மனசின் குறுகுறுப்பு அதிகமாக, பிள்ளை ஆபீஸ்போன பிறகு மாடிக்குப் போக கல்யாணி முனைய அவளைத்தடுக்கிறாப்போல் சகுந்தலா முன்னால் நின்றாள்.

'ஏதாவது வேணுமா அத்தே?'

'ஏன் கேக்குறே?'

'இல்லே, மாடிப்படி ஏற வந்த மாதிரி இருந்துச்சு... அதான்...'



'மாடிக்கு போகலாம்னுதான் வந்தேன்...'

'என்ன வேணும் சொல்லுங்க அத்தே...நா போய் எடுத்திட்டு வரேன்...'

'ஏன், நா போகக் கூடாதா?'

'அய்யய்யோ! நா அப்படிச் சொல்லுவேனா? உங்களுக்குப் பிரஷர் இருந்ததுனு ஏற்கனவே உங்க பிள்ளை ரொம்பக் கவலை படறார். 'அம்மா மாடிப்படி ஏறக் கூடாது. உணர்ச்சி வசப்படக் கூடாது, கவனமா இரு'னு சொல்லி இருக்கார் அத்தே...'

ஒருவிதப் பதட்டத்துடன் மருமகள் பேசுகிற மாதிரி தோன்ற இந்தச் சின்ன விஷயத்துக்காக இவள் ஏன் பதைக்கிறாள் என்று கல்யாணிக்கு சிரிக்கத் தோன்றியது.

அம்மாவைச் சரியாகப் பார்த்துக் கொள்ளாவிட்டால் நடப்பதே வேறு என்று சுரேஷ் மிரட்டி இருக்கிறானா?

அதான் இந்தத் தவிப்பு தவிக்கிறாளா?

அசடு...

'ஒருதரம் ஏறினா ஒண்ணும் ஆயிடாது சக்கு...?

'ப்ரஷரோட, உங்களுக்கு முழங்கால் வலியும் உண்டே அத்தே! சொன்ன பேச்சைக் கேளுங்க...தயவுபண்ணி...'

அழுது விடுவது போலச் சகுந்தலாவின் கண்கள் லேசாகக் கலங்க, படியில் வைத்த காலை இழுத்து, 'சரி நா மாடிப்படி ஏறலை...நீ அனாவசியமா பதறாத... சரியான அசடும்மா நீ... புருஷன் சொல்லிட்டா, அது வேதவாக்காக்கும்?' என்று சிரித்தபடி கல்யாணி பேச, விவகாரம் அன்று அதோடு நின்றது

இது நடந்து பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் மனசில் என்னமோ பிராண்ட, பிள்ளை, மருமகள் இரு

வருமே இல்லாதபோது கல்யாணி மாடிக்குப் போகவே செய்தாள்.

சாதாரணமாய் பிள்ளையின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க அவ்வப்போது அவள் முடிந்ததோ, முடியலியோ மாடிக்கு வருவது உண்டுதான்.

திருமணமாகிவிட்ட இந்த மூன்றுமாசங்களாய்த்தான் ரொம்ப வருவதில்லை.

அதுவும் நடுவில் ஒரு முறை காய்ச்சல் வந்து படுத்து எழுந்த பின் உட்கார்ந்தால், எழுந்தால்கூட மார்பு ஏகத்துக்கு இரைக்க, அதற்கப்புறம்தான் சுத்தமாய்ப் படிகளில் ஏறுவதில்லை.

மெதுவாக ஏறிப் பிள்ளையின் படுக்கை அறையில் நுழைந்தாள்.

தாறுமாறாய் இறைந்த துணிமணிகள்...

கலைந்த படுக்கை...

ஏகப்பட்ட சாமான்களோடு ட்ரெஸிங் டேபிள்...

இங்கும் அங்குமாய்ப் புத்தகங்கள், வீடியோ டேப்புகள்.

கல்யாணிக்கு கறுகறுவென்று கோபம் எழுந்தது.

என்ன பெண் பிள்ளை இவள்!

கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள், சுத்தபத்தமாய் காரியங்களைச் செய்வாள் என்று நினைத்தால் இப்படி ஊழலாக இருக்கிறாளே!

தாலி கழுத்தில் ஏறினபின் உடம்பு வளைந்து வேலை செய்வதுதானே பெண்ணுக்கு லட்சணம்!

வந்த புதுசில் இப்படி இல்லையே!



ஓடியாடி, குனிந்து நிமிர்ந்து அத்தனையும் கச்சிதமாய் செய்தவளுக்கு இப்போது என்ன வந்துவிட்டது?

வசதியைக் காணாமல் இருந்துவிட்டுத் திடீரென எக்கச் சக்க செளகரியங்களை அனுபவிக்கத் தொடங்கினதும் திமிர் வந்து விட்டதா?

கடுப்பு மாறாமல் கல்யாணி அறையைச் சுற்றி வந்தாள்.

சிகரெட் துண்டங்கள்...

நெருப்புக் குச்சிகள்...

ட்ரெஸிங் ரூமில் இருந்த அலமாரியைத் திறந்தவள், திடுக்கிட்டாள்.

பாட்டில்கள்... வரிசையாய்க் காலி பாட்டில்கள்...

ஒன்று, இரண்டு... ஏழு... அம்மாடி! இத்தனை காலி பாட்டில்களுக்கு இங்கே என்ன வேலை!

சுரேஷுக்கு கல்யாணமாகும் முன் கிட்ட இருந்து அறையில் அகப்பட்ட காலி புட்டிகளை வீசி எறிந்து விட்டேனே...

அப்புறம்? இவை ஏது?

பயமும், பதட்டமும், கோபமும் ஒன்றாய் ஆளை அமுக்க, கீழே வந்து சோபாவில் உட்கார்ந்தாள்.

மார்பில் படபடா...

கண்களில் ஜலம்...

இந்தப் பிள்ளை பெண்டாட்டி வாயைக் கட்டிவிட்டு என்னை ஏமாற்றத் துவங்கி விட்டானா?

'ஐயோ, என் வாழ்க்கை இப்படிச் சீரழிகிறதே!' என்று சகுந்தலா தனிமையில் அழுகிறாளா?

அதுதான் அந்த நாற்றம், கண் சிவப்பு, முக வீக்கமா?

அன்றிரவு சினிமாவிலிருந்து வீடு திரும்பினவர்களைக் கூடத்திலேயே கல்யாணி மடக்கினாள்.

'இப்ப எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்; இந்த வீட்டுல என் முதுகுக்குப் பின்னால என்ன நடக்குது? சொல்லு சுரேசு... சத்தியமா நிஜத்தைச் சொல்லு...'

அந்தப் படபடப்பையும், கத்தலையும் பார்த்து சுரேஷ் கொஞ்சம் மிரண்டுதான் போனான்.

'என்னம்மா... என்னாச்சு உனக்கு? ஏன், என்னென்னமோ பேசறே?'

'நானா பேசலைடா... மாடில 'உன் அறையில காலி புட்டிங்க இருக்குதே அதுதான் என்னைப்பேச வைக்குது... புரியுதா?'

'.........'

'ஏன் வாய் அடைச்சிப் போச்சு? எனக்கு இப்ப உண்மை தெரிஞ்சாகணும்... நீ மறுபடி குடிக்கத் துவங்கிட்டியா? சொல்லுடா.'

'சரி நீ பேச வேணாம்... சக்கு, நீ சொல்லு... பயப்படாம சொல்லு. அந்தக் காலி புட்டிங்க ஏது?'

சகுந்தலா எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். கணவனை நிமிர்ந்து பார்த்தாள். சின்னக் குரலில் கிசுகிசுப்பாய்ப் பேசினாள்.

'அந்தப் புட்டிங்களை நான்தான் வாங்கி வந்தேன் அத்தே... திராட்சை ஜூஸ் பண்ணி பாட்டில்ல அடைச்சி வைக்கலாமேனு, கடை வீதிலேந்து பாட்டில் ஒண்ணு எட்டணானு வாங்கி வந்தேன்.'



இந்த விளக்கத்தை எதிர்பார்க்காத கல்யாணி புருவங்களை உயர்த்தினாள்.

'எப்ப?'

'நீங்க காயலா படுத்திருந்தப்ப... அப்புறம் ஒழியவே இல்லே...'

இப்போது தைரியமாய் சுரேஷ் அம்மாவை முறைத்தான்.

'என்ன, ஏதுனு கேட்காம நீயா ஒரு முடிவுக்கு வந்து, என்ன கலாட்டாம்மா, இதெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கலை. நாங்க உன்கூட இருக்கறது பிடிக்கலைனா சொல்லிடு... தனியா போயிடறோம்.'

அதற்குப் பிறகு இந்தப் பதினைந்து நாட்களாய் கல்யாணி 'ம்' என்று முனகக்கூட இல்லைதான். ஆனாலும் தனக்குத் தெரியாமல் என்னமோ நடக்கிறது என்கிற உறுத்தல் மட்டும் மறையவேயில்லை.

ஹூம்...

பிரம்மப் பிரயத்தனம் பண்ணியும் மனசுபாராயணத்தில் லயிக்காமல் இருக்க, 'என்னப்பனே... என்னை மன்னிச்சுடு' என்றவள், எழுந்து பூஜை அறைக்குச் சென்றாள்.

உருவாய் அருவாய்
உளதாய் இலதாய்
மருவாய் மலராய்
மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்
கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய்
அருள்வாய் குகனே'

என்று மனம் கசிந்து வேண்டி விழுந்து நமஸ்கரித்துவிட்டு அங்கேயே உட்கார்ந்துக்கொண்டாள்.

அறைவாசலில் நிழலாடியது.

ஏழுமலை.

'என்னப்பா?'

'ஒண்ணுமில்லீங்க... வேளை கெட்ட வேளைல இங்க வந்து உட்கார்ந்திருக்கீங்களேனு பார்க்க வந்தேன். உடம்புக்கு ஒண்ணுமில்லிங்களே?'

கல்யாணி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

'மனசு சரியா இல்லே, ஏழுமலை.'

'.........'

'கால்கட்டு போட்டா எல்லாம் ஒழுங்காயிடும்னு நினைச்சேன்; ஆனா, இப்ப எதுவுமே சரியில்லாத மாதிரி படுது...'

'சின்னையாவும், சின்னம்மாவும் வெளில போயிருக்காங்க போலிருக்குது.'

'ம்... தெரிஞ்சவங்க பிள்ளைக்குப் பிறந்தநாள் பார்ட்டியாம்.'

'அம்மா...'

ரொம்பவும் சின்னக் குரலில் ஏழுமலை முனக, கல்யாணி நிமிர்ந்தாள்.

எதிரில் நின்றவன் கண்களில் நீர்.

'என்னடா?'

'அம்மா... வந்து'

'எதைச் சொல்ல இப்படித் தயங்கறே ஏழுமல?'

'உங்க கையால சோறு தின்னு இந்த வீட்டுல ஒருத்தனா வளர்ந்திட்டேன்; அதான் கண்ணையும் காதையும் மூடிகிட்டு சும்மா இருக்க முடியலை... மனசு பதைக்குதுங்க.'



'என்ன விஷயம்... சொல்லப் போறியா இல்லியா?'

'என்னை மன்னிச்சிடுங்கம்மா... இந்த வீட்டுலே ரொம்ப பெரிய தப்பு ஒண்ணு நடக்குது...'

'எ... என்னடா?'

ஏழுமலை துண்டால் வாயை பொத்திக்கொண்டான்.

'சின்னையாவோட சேர்ந்துகிட்டு... அய்யோ என் வாய் கூசுதுங்க... சின்னம்மாவுக்கு கு...குடிக்கறாங்கம்பா,

'எ... என்... னது'?

'என்னப் பெத்தவ மேல ஆணையா நா சொல்றது உண்மைங்க... விவரம் தெரிஞ்சதுலேந்து நான் கிடந்து தவிக்கிற தவிப்பு அந்த முருகனுக்குத்தான் தெரியும். உங்க கிட்ட சொல்லாம இருக்க முடியலை... சொல்லவும் பயம் ... முதல்ல அவங்க வீட்டுப் பெரியவங்களை வரவழிச்சு இரண்டுபேரையும் நிக்க வைச்சு கண்டிச்சுத் திருத்தற வழிய பாருங்கம்மா... நிலமை நாளுக்கு நாள் மோ... மோசமா...'

மேலே பேச முடியாமல் ஏழுமலை அழத் துவங்க, கல்யாணிக்கு கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது.

நாற்றம்...

கண் சிவப்பு...

முக உப்பல்...

நடவடிக்கைகளில் ஒரு அசமஞ்சத்தனம்...

காரியங்களில் ஊழல்.

சதா மாடியில் புருஷனுடன் தங்கல்.

காலி புட்டிகள்...

சமாளிப்பு...

இத்தனைக்கும் காரணம் இவளும் குடிப்பதுதானா? முருகா, மோசம் போய்விட்டேனே...

திடுமென மாரைப் பந்து போல என்னவோ அடைக்க, மூச்சு விட முடியாமல் திணறியவள் 'ஏ...ஏ... ஏழு... ம...' என்று அருகில் நின்றவனை அழைக்க முயன்று, அதில் தோல்வியுற்று கீழே சாய்ந்தபோது. அவள் உயிர் உடலை விட்டுப் பிரிந்து விட்டிருந்தது.

# 7

'அவங்க நேரம் முடிஞ்சு போச்சி, போயிட்டாங்க... நீ என்ன பண்ண முடியும் சுரேஷ்? நானும் பார்க்கறேன். இதுக்கு இரண்டு நாளா ஆனாலும் தான் ரொம்ப இடிஞ்சி போயிருக்குற... சியரப் ஐ ஸே... போனவங்களை நினைச்சிகிட்டே இருந்தா, அவங்க வந்திடப் போறாங்களா?'

'அதுக்கில்லேடா சுந்தர்... என்னண்ட ஒரு வார்த்தை பேசாம பொக்குனு போயிட்டாங்களேன்றதை நினைக்குறப்ப தாங்கமாட்டேங்குது. கடைசி நிமிஷத்துல என்ன சொல்ல நினைச்சாங்களோ' எப்படி வலியால அவஸ்தைப் பட்டாங்களோ...

'நீங்க புறப்படறச்சே நல்லா இருந்தவங்களுக்கு திடும்னு மாரடைப்பு வந்திட்டா நீ என்னப்பா பண்ண முடியும்?'

'அதுவும் சரிதான்... ஆனாலும் நினைச்சிட்டா மனசு துடிச்சுப் போகுது...'

'விடு... விடு... சும்மா அதனையே எண்ணிகிட்டிருந்தா குழப்பம்தான் அதிகமாகும்.'

'யு ஆர் ரைட்... இரண்டு நாளா ராத்திரி தூக்கம் இல்லே...உடம்பு உதறி உதறிப்போடுது. காதுக்குள்ளார ஒரே இரைச்சல்.'



'ஒரு பெக் அடிச்சிட்டு படுக்கறதானேப்பா? உன் உடம்மையும் நீ பார்க்கணுமில்லே?'

'நினைச்சேன். ஆனா, வீடு பூரா உறவு ஜனங்க இருக்குறப்போ நாம எப்படி குடிக்கறனு விட்டுட்டேன். இதோ பாரு. இப்ப கூட கை என்னமா நடுங்குது. பாரு'

'உறவும் ஆச்சு, கிறவும் ஆச்சு... உன் கஷ்டம் அவங்களுக்கு புரியுமா? நல்லா பயந்தே அவங்களுக்காக...'

ஒரு சிகரெட்டை அணைத்த கையோடு அடுத்ததைப் பற்றவைத்துக் கொண்ட சுரேஷ் நண்பனைக் கரிசனத்துடன் ஏறிட்டான்.

'உன் ஒருத்தனுக்குத் தான்டா என் வேதனை புரியுது... அம்மா தலைப்பைப் பிடிச்சிகிட்டு இத்தனை வருஷமா வாழ்ந்தவன், இனி அவங்க இல்லாம எப்படி இருக்கப் போறேன்னு நினைச்சா திகீர்னு இருக்கு... ஐ லவ் மை மதர் ஸோ மச்...'

'பின்னே? உன்னைப்பெத்து வளர்த்தவங்க இல்லியா?'

'என் மேல உயிரையே வைச்சிருந்தாங்க சுந்தர்.'

'தெரியாதாப்பா...'

'அம்மானு இனி நா யாரைக் கூப்பிடுவேண்டா? இனி எனக்கு யார்டா இருக்காங்க?'

'நாங்கல்லாம் இல்லியாப்பா...'

'யார் இருந்தாலும் எங்கம்மாக்கு ஈடாகுமா? டேய் சுந்தர், என்னால முடியலைடா. நெஞ்சுல வண்டு ஒண்ணு வலிக்க வலிக்க குடையுதுடா...நா எப்படித் தாங்கப் போறேன்? பேசாம தற்கொலை பண்ணிக்கலாமானு கூட தோணுதுடா'

'ஏய்...ஏய்... தேத்திக்கப்பா ... என்ன இது பச்சை பிள்ளையாட்டம்.'

'சத்தியமா என்னால் முடியலை... பாரு பாரு...உடம்பெல்லாம் எப்படி உதறி போடுது ... பாரு ... இந்த துக்கத்தை தாங்கிக்கணும்னா உடனே எனக்கு ஒரு க்ளாஸ் ட்ரிங்க் கொடுடா... ப்ளீஸ்டா...!'

சுந்தர் எழுந்து போய் அறைக் கதவைச் சாத்திவிட்டு வந்தான்.

'இங்க வைச்சிருக்கியா, இல்லே போய் வாங்கி வரட்டுமா?'

அலமாரி அடித்தட்டுல துணிகளைத் தூக்கிட்டு பாரு!' இருந்தது.

எடுத்து அவனுக்கு டம்ளரில் ஊற்றி கொடுத்துவிட்டு பாட்டலிலிருந்தே சுந்தர் குடித்தான்.

இரண்டு பெக் உள்ளே போனதும் சுரேஷ் அழ ஆரம்பித்தான்.

'டேய் சுந்தர். சத்தியமா எங்கம்மாவ பிரிஞ்சு என்னால இருக்க முடியாதுடா... நா போறேன், அவ கிட்டேயே போயிடறேன்.'

'ப்சீ... சுரேஷ்... கன்ட்ரோல் யுவர் செல்ப்...'

'முடியாது ... என்னால முடியாது ... என் துக்கம் யாருக்கும் புரியாது...'

'எனக்கு புரியுதுடா... தாங்கிக்கறதைத் தவிர வேற வழி இல்லே. இந்தா இன்னொரு க்ளாஸ் சாப்பிடு... விழுங்கிக்க, துக்கத்தை விஸ்கியோட சேர்த்து விழுங்கிக்க.'

'இந்த விஸ்கி மட்டும் இல்லேன்னா, சத்தியமா என்னால அம்மா இறந்திட்டதை தாங்கிக்க முடியாதுடா.



இதுதான் இப்ப உயிரை தக்க வைச்சிருக்கு...நா சொல்றது சரிதானே? உனக்குப் புரியுதில்லே

'நல்லா புரியுது, வீணா அலட்டிக்காதேப்பா...'

'இந்த பாட்டில் தீர்ந்திடுச்சின்னா நா என்ன பண்ணுவேன்? வேறு இல்லையேடா... வாங்கிட்டு வறியா? சக்குவ கேட்டு பணம் வாங்கிக்க... ஷி வாஸ் ரிகலே வாங்கிடு... அம்மா... ஆ... என்னை விட்டுப் போக உனக்கு மனசு எப்படிம்மா வந்துச்சு... அம்மா... ஆஆ'

சில நிமிஷங்களுக்கு அழுது புலம்பிய சுரேஷ் என்னமோ நினைத்துக்கொண்ட மாதிரி பேசினான்.

'ஏழுமலைகிட்ட பேசிட்டிருந்தப்போ, அவன் சக்குவும் என்னோட சேர்ந்து குடிக்கறதை அம்மாக்கிட்டே சொல்லி இருக்காண்டா... அதைக் கேட்ட அதிர்ச்சித்தான் அவங்களுக்கு மாரடைப்பு வந்திருக்கு...'

'யார் சொன்னாங்க?'

'மாமா...இன்னி காலைல என்னைத்தனியா அழைச்சி, உங்கம்மா சாவுக்கு நீங்கதான்டா காரணம், இனியாவது புத்தியோட இருக்கப் போறிங்களா இல்லியானு கூச்சல் போட்டாரு...'

'பாவம்டா நீ...'

'முதல்ல இந்த ஏழுமலைய வேலைய விட்டு நிறுத்தணும். வேலைக்காரக் கழுதையா ஒழுங்கா இல்லாம அம்மாகிட்ட வத்தி வைக்க இவன் யாரு? நேத்து பூரா நா குடிய தொடவேயில்லே சுந்தர்.

இன்னிக்கு மாமா அப்படி கத்தினப்புறம்தான் சீ இது என்ன வாழ்க்கைனு தோணிப் போச்சு... ஒரு சந்தோஷத்துக்கு கொஞ்சம் குடிச்சா என்னடா தப்பு? அம்மா மேல எனக்கா பாசம் இல்லே? எனக்கும் எங்கம்மாவ விட்டா

வேற யாருடா? ஐயோ சுந்தர், நா எப்படிடா அம்மா இல்லாம இருக்கப் போறேன். பயமா இருக்குடா... அம்... மா... ஆ...'

பெற்றவளை இழந்த துக்கத்தை நாலு கிளாஸ் விஸ்கியால் அமுக்குவதாகத் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்ட சுரேஷ், ரொம்ப சீக்கரமே தேவையானதை இழந்து யாருடைய ஏசலும், கோபமும் காதுகளில் ஏறி நிம்மதியைப் பாதிக்காத அளவுக்கு வேறு ஓர் உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினான்.

## 8

கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தை வெறித்துப் பார்க்கையில் அது தன் உருவம்தான் என்பதை நம்புவது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

ஊதிய முகம்...

இடுங்கின கண்கள்...

கழுத்தே தெரியாமல் பருத்துவிட்ட உடல்.

இது நான்தானா?

சட்டென்று சகுந்தலாவுக்கு குரல் எடுத்து அழவேண்டும் போல ஆத்திரம் எழுந்தது.

நான் ஏன் இப்படி உருமாறிப் போனேன்?

உருவம் மட்டும்தான்னா?

மனமும் புத்தியும் கூடத்தான் சீரழிந்துவிட்டன.



இல்லாவிட்டால் சாயங்காலம் எப்போதடா வரும் என்று காத்திருப்பேனா? க்ளாஸில் ட்ரிங்கை ஊற்றும் முன்னரே பரபரக்கத் துவங்குவேனா?

ஒரு நாளைக்கு, சரி, இன்று வேண்டாம் என்று கூடத் தீர்மானிக்க முடியாத கோழையாகிப் போவேனா!

உட்காரப் பிடிக்காமல் எழுந்து ஜன்னலிடம் சென்று நின்றுகொண்டாள்.

நீல வானத்தின் பின்னணியில் கூட்டமாய் நாலைந்து மைனாக்கள் பறந்து போயின.

நீலவானம்...

பறவைகள்...

தென்றல்...

ஆடும் தென்னை மரங்கள்.

பச்சை வயல்கள்.

சலசலத்து ஓடும் ஓடை...

ஓரமாய் உயர்ந்து பூத்திருக்கும் நாணற் புதர்கள்.

கிராமத்தில் வளர்ந்த நாட்களில் இயற்கையோடு ஒன்றிப் போய் மணிக்கணக்கில் ஒருவித பரவசத்துடன் அத்தனையும் ரசித்து மகிழ்ந்த சகுந்தலா இன்று எங்கே?

அதிகாலையில் எழுந்து, வாசல் தெளித்து, கோலம் போட்டுக் குளித்து, அம்மாவுக்கு சர்வ காரியங்களிலும் உதவி செய்து, பெரியவர்களை மதித்து, ஊர் ஜனங்களால் ஒரு மனதாய்ப் பாராட்டப்பட்டு, அடக்க ஒடுக்கமாய், பண்பு நிறைந்தவளாய் வாழ்ந்த சகுந்தலா எங்கே?

நெஞ்சின் பாரம் தாங்காமல் கண்களில் நீர் கசிய, ஆயாசத்துடன் அவள் அப்படியே சரிந்து தரையில் உட்கார்ந்துக் கொண்டாள்.

அத்தனை சிறப்பாக இருந்தவள் இன்று ஏன் இப்படி அழிந்து போனேன்?

இதற்கு யார் காரணம்?

சுரேஷ்?

அவராகவே இருக்கட்டும், ஆனாலும் என்புத்திஎங்கே போயிற்று?

தாலி கட்டினவன் நெருப்பில் குதி என்று சொன்னால் கண்ணை மூடிக்கொண்டு விழுந்து விடுவோமா?

பின், இதை மட்டும் ஏன் செய்தேன்?

குடி என்று தெரியாமல் துவக்கத்தில் குடித்து விட்டேன்தான்; என்னை அந்த அளவுக்கு அவர் ஏமாற்றினார்தான். ஆனால் அதற்குப் பிறகு?

உண்மை தெரிந்த பின்?

மாபாதகம் ஒன்றைப் புருஷன் செய்கிறான் என்றால் அதற்கு உடந்தையாகவா இருப்பது?

உடனே அத்தையிடம் சொல்லி அவனைக் கண்டிக்க முற்படாததோடு, புதை குழியை நோக்கிக் காலை வைத்திருந்த என்னையும் திசை திருப்பிக் கொண்டிருக்க வேண்டாமா?

ஏன், அன்று செயலிழந்து போனேன்?

புத்தி மழுங்கி ஏன் ஜடமானேன்?

'உன் வீட்டில் உண்மையைச் சொல்வேன்' என்று சுரேஷ் மிரட்டியதற்குப் பயந்துகொண்டா?

இல்லை, பழகிவிட்ட நாக்கைக் கட்டுப்படுத்தத் தெரியாத அடிமைத்தனத்தாலா?

இரண்டும்தான்.

இது பாதி, அது பாதி...



நிஜத்தை எதிர்நோக்கி, கோணலைச் சீர்செய்யப் புத்தியில்லாமல் போனதன் விளைவு, இன்று மனமும், உடம்பும் அழுகி நிற்கிறேன்.

ஊற்றெடுத்த கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் அழுத சகுந்தலா, கொஞ்சம் சமாதானமாகி நிமிர்ந்தபோது அவள் பார்வை எதிர்ச் சுவரில் இருந்த காலண்டரில் விழுந்தது

ஜூலை பதினாறாம் தேதி.

அதைச்சுற்றிப் போடப்பட்ட சிவப்பு வளையம்.

அத்தை இறந்து போய் இரண்டு வருஷம்பூர்த்தியாகப் போவதை எப்போதோ குறித்து வைத்த அடையாளம்.

முதன் முதலில் சுரேஷ் தன்னையும் குடிக்கக் கட்டாயப் படுத்தும்போது நிலைமையைச் சரிபண்ண முயற்சிக்காதவள், அத்தை அகாலமாய்த் தவறிய பிறகாவது விழித்துக்கொண்டு, உடனடியாய் எங்கள் பாதையை மாற்றப் பாடுபட்டிருக்க வேண்டாமா?

தப்பு பண்ணுகிறோம் என்ற பதைப்பு உண்மையாக இருந்திருந்தால் எப்பாடு பட்டாவது எங்களை, முக்கியமாய் என்னை, சீர் செய்துகொண்டிருக்க மாட்டேனா?

அன்றைக்கு விளையாட்டாய் இருந்துவிட்ட சமாசாரம் இன்று பூதமாய் வளர்ந்து மூச்சைத் திணற அடிக்கிறது என்பதை நினைக்கையில் அடங்கி இருந்த அழுகை மீண்டும் தலை தூக்கியது.

அழுகையினூடே, அத்தை இறந்த தினமும், அதைத் தொடர்ந்து வந்த நாட்களும் அவள் உள்ளுக்குள் எட்டிப் பார்த்தன.

காரியங்கள் முடிந்த அன்று, இவளும் குடிக்கிறாள் என்கிற சமாசாரம் ஏழுமலை, மாமா மூலம், அப்பா

அம்மாவுக்கும் தெரிய வந்ததும் இவளைச்சுற்றி நின்று கொண்டு அடித்துப் புரட்டாத தோஷமாய் என்னமாய்க் காரித துப்பினார்கள்!

பொம்பளையா—நீ பொம்பளையா? என்றார்கள்.

அடிப்பாவி—நல்ல மனுஷி ஒருத்தி சாக நீ காரணமாயிட்டியே! இது தெய்வத்துக்கே அடுக்குமா?—என்றார்கள்

கடைசியாய், 'இனி நீ எங்க மகளே இல்லே...எங்களை பொறுத்தவரை அவ செத்து மடிஞ்சிட்டா— நினைப்புல வைச்சிக்க' என்று உறுமினார்கள்.

அன்றைக்கு இந்தக் கலாட்டாக்களுக்கெல்லாம் கொஞ்சமாவது ஈடு கொடுத்தது சுரேஷ்தான்.

ஏசின சொந்தக்காரர்களின் நடுவில் நின்று தைரியமாய்ப் பதிலுக்குக் கத்தினான்.

'உங்க அக்கறை இல்லேனு இங்க யாரும் தவிக்கலை... முகத்துல விழிக்க மாட்டீங்க... அதானே? தாராளமா இருங்க... அதுல எங்களுக்கும் சந்தோஷம்தான்... என் பெண்டாட்டி என் மனசு போல நடந்துக்காம உங்க இஷ்டப்படி ஏன் இருக்கணும்? கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டீங்க இல்லே? இனிமே இவ பத்தின கவலை உங்களுக்கு வேணாம்' என்று அழுத்தம் திருத்தமாய்க் கத்தியதும், நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்று வந்திருந்த அத்தனை உறவினர்களும் தட்சணமே ஊருக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தனர்.

அன்றிரவு, நடந்த சம்பவங்களையும். பேச்சுக்களையும் எண்ணி, சகுந்தலா மாய்ந்து போகையில், சுரேஷ் பரிவுடன் அவளை அணைத்து மாடிக்கு இட்டுச் சென்றான்

'எதுக்காக இப்படி மாஞ்சு போறே சக்கு? மூளை கெட்டு அவங்க கன்னாபின்னானு பேசிட்டதுக்காகவா? சரியான அசடு நீ... இந்தக் காதுல வாங்கி அந்தக் காதால விடாம. இதுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து உன்னையே வேதனைப்படுத்திக்குறியே? இந்த மாதிரி காட்டுமிராண்டித்தனமா நடந்துக்குற மனுஷங்களோட. இனி நமக்கும் சம்பந்தமே வேணாம்...மற ...துடைச்சிப் போடு... என்ன?'



சின்னக் குரலில் பேசினவன், இரண்டு க்ளாஸில் விஸ்கியை விட்டு ஒன்றை அவளிடம் நீட்டியபோது, 'இன்றைக்குமா, இனியுமா?' என்று சகுந்தலா தயங்கியது நிஜம்.

'எதுக்கும் கவலைப்படாம வாங்கி குடிம்மா... டென்ஷன். கவலை, வேதனை எதுவும் இல்லாம நிம்மதியா இருக்கலாம்.'

குடித்தாள்.

ஒன்று...இரண்டு...மூன்று

அவன் சொல்வது சரிதான். இந்த ட்ரிங்கைக் குடித்து விட்டால் நிச்சயம் மனசு தளைகளிலிருந்து விடுபட்டு எங்கோ பறக்கத்தான் செய்கிறது.

அவமானம்? தப்பு பண்ணுகிற உணர்வு? வலி?

ம்ஹூம் ஒன்றும் இல்லை...

சுகம்...சுகம்...சுகம்தான்!

ஆனால் இத்தனை சுதத்தையும் மீறிக் கொண்டு, விடிந்து போதை தெளிந்ததும் பெரிசாய்த் தப்பு பண்ணி விட்ட தினுசில் தினமும் மனசு கிடந்து தவியாய்த் தவிக்கும்.

ஐயோ, நான் ஏன் இப்படி மனபலம் இல்லாமல் அவஸ்தைப்படுகிறேன் என்ற புலம்பலும்!

தவிப்பும், புலப்பலும் தாங்க மாட்டாமல் போனால் பூஜை அறைக்குச் சென்று முருகன் படத்துக்கு முன் நின்று

'எனக்குப் புத்தி கொடு, நல்ல வழியைக் காட்டு' என்று அவள் நெக்குருகி வேண்டுவாள்.

குளித்து, ஈரப்புடவையுடன் வாய் ஓயாமல் கந்தர் சஷ்டி கவசம் படிப்பாள். விபூதியை அள்ளிப் பூசிக் கொண்டு, 'இனி நான் குடியைத் தொட மாட்டேன்' என்று உறுதியாய் நிற்பாள்.

என்ன செய்து என்ன?

மாலை ஆறு ஆவதற்குள் நாக்கு வரட்சியும், படபடப்பும் எக்கச்சக்கத்துக்கு கூடிப்போய் ஆளை விரட்டத் துவங்கும்போது மன வைராக்கியமாவது மண்ணாங் கட்டியாவது!

அதுவும் சுரேஷ் நண்பர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு வெளிநாட்டுச்சரக்கை மணக்கமணக்கத்திறந்து ஊற்றி, 'வா டார்லிங் பீ எஸ்போர்ட்' என்று அழைத்து விட்டால், அந்த அழைப்புக்காகவே காத்திருந்த மாதிரி முருகன் நினைப்பு நெஞ்சைவிட்டு மறையும். 'யாரோ ஏதோ சொல்லுகிறார்கள் என்பதற்காக என் சந்தோஷத்தை நான் ஏன் தியாகம் பண்ண வேண்டும்' என்கிற சப்பைக்கட்டு குடியேறும். சுயபட்சாதாபம் ஏராளமாய்ச் சூழ்ந்துக் கொள்ளும். தாலி கட்டினவன் வார்த்தையை விட உயர்ந்தது வேறு என்ன?—என்கிற தர்க்கம் சமாதானம் செய்யும்.

அப்புறம்?

பழைய குருடி, கதவைத் திறடிதான்...

இரண்டு வருஷங்களாக நடக்கும் இந்த அக்கிரமத்துக்கு ஒரு முடிவே இல்லையா?

விடிவே கிடையாதா?

வாய் வலிக்கும்வரை அவள் சுரேஷிடம் இது குறித்துப் பேசியாகிவிட்டது.

குணம் இருந்தால் 'டோன்ட் வொர்ரி, ஜஸ்ட் என்ஜாய்' என்பான் சிரித்துக்கொண்டே...



இல்லாவிட்டால் 'எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டியா? சொத்து உன் பேர்ல இருக்கிற திமிரா?' என்பான்.

'சோத்துக்கு லாட்டரி அடிச்சிக்கிட்டிருந்தவளை சுக போகமா வாழ வைச்சதுக்கு இதுவும் வேணும், இன்னும் வேணும்' என்பான்.

கோபம் அதிகமாகிவிட்டால் ஓங்கி அறைந்து 'ராஸ்கல். உன் இடத்தைப் புரிஞ்சிகிட்டுவாயத் திறக்காம இருக்குறதுனா இரு, இல்லேன்னா ஒழி' என்று கத்துவான்.

இவள் எங்கே போவாள்?

யாரிடம் சொல்லிப் புலம்புவாள்?

'நான் இருக்கிறேன் உனக்கு உதவ. கவலைப்படாதே' என்று ஆறுதல் கூறி அணைக்க யார் இருக்கிறார்கள்?

மீண்டும் ஜூலை பதினாறும், அந்த சிவப்புச் சுழியும் பார்வையில் பட, அத்தை செத்து இரண்டாவது வருஷம் பூர்த்தியாகும் அந்த நாளுக்குள்ளாவது புனர்ஜென்மம் எடுக்க மீண்டும் தீவிரமாய் முயற்சிக்க வேண்டும் என்று தோன்றியது.

சுயமாக இந்தச் சிலந்திக்கூட்டை அறுத்துக்கொண்டு வெளியே வர எனக்குத் தைரியமில்லை.

தாலி கட்டினவனை நம்புவதில் அர்த்தம் இல்லை.

அப்புறம்?

வெட்கம், மானம், ரோஷம் என்று பார்க்காமல் பெற்றவரைச் சரணடைந்தால்?...

'என்னைக் காப்பாற்றுங்கள்: என் கையைப் பிடித்துத் தூக்கி விடுங்கள்; கழுத்து வரை புதை மணலில் சிக்கிக் கொண்டு விட்டேன்; உங்களை விட்டால் எனக்கு உதவுபவர் யாரும் இல்லை' என்று காலடியில் விழுந்து கதறினால் என்ன?

இத்தனை கெஞ்சலுக்குமா அப்பா மனசு இளகாது.

பிறந்த வீட்டில் பத்துப் பதினைந்து நாட்கள் தங்கி தனியாகப் பொழுதைக் கழிக்காமல் கூடப்பிறந்தவர்கள் பெற்றவர்களோடு இருந்து, கடவுளை ஸ்மரித்து மன வலிமையை வளர்த்துக் கொண்டால்?

நினைக்க, நினைக்க, இதுநாள் இல்லாத உற்சாகம் புதுசாய் பிரசவிக்க, கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து திரும்பிய கணவனிடம், 'நாளைக்கு ஊருக்குப் போய் எங்க விட்டுல கொஞ்சநாள் இருந்திட்டு வரேங்க...' என், அவன் இது என்ன அதிசயம் என்று கண்களை விரித்தான்.

'பிறந்த வீட்டுக்கா? அவங்கதான் நீ செத்துட்டதா தலை முழுகிட்டுப் போயிட்டாங்களே?'

'ஏதோ கோவத்துல அப்படிப் பேசிட்டாங்கதான். ஆனாலும் பெத்த பாசம் விட்டுடுமா?'

'உனக்கு அந்த நம்பிக்கை இருந்தா, தாராளமா போயிட்டுவா'

மறுநாள் காலையில் கடைக்குச் சென்று தம்பி, தங்கைகளுக்குப் பரிசுப் பொருட்கள் வாங்கினாள். அம்மா வுக்கு பட்டுசேலையும், அப்பாவுக்குபாலியஸ்டர் முழுக்கை ஷர்ட்டும் தேர்ந்தெடுத்துக்கொண்டு, கார் கொள்ளாத சாமான்களுடன் கிளம்பி மாலை ஐந்து மணி சுமாருக்கு வீட்டு வாசலில் இறங்கினாள்.

திண்ணையில் அமர்ந்திருந்த அப்பா ஒரு கணம் திடுக்கிட்டுப் போனார்.

அம்மா, தம்பி, தங்கைகள் நொடிப் பொழுதில் வாச லுக்கு வந்து விட்டனர்.



'எங்க வந்தே?'

'அப்பா... நா... வந்து...'

கண்கள் சிவக்க, மீசை துடிக்க மீண்டும் அடிக் குரலில் அவர், 'எங்கே வந்தே?, என, சகுந்தலா விசும்ப முற்பட்டாள்.

'நா... வந்து... எனக்கு... உள்ளே போயி பேசக் கூடாதாப்பா... தயவு பண்ணி...'

'நா உனக்கு அப்பனும் இல்லே, நீ எனக்கு மகளும் இல்லே. கண்ட கழுதைகளைப் படி ஏத்தற அளவுக்கு நா இன்னும் மானம் இழந்திடலை...'

'அப்பா...நா சொல்லறதைக் கொஞ்சம் கேளுங்கப்பா.'

'ஒரு வார்த்தைகூடக் கேட்க மாட்டேன். பத்து எண்றதுக்குள்ள நீ இந்த இடத்தைவிட்டு நகரலைனா, இங்க ஒரு கொலை விழும். டேய், போய் அறுவாள எடுத்தாடா...ம் ஓடு...'

சுற்றிலும் தெரு ஜனங்கள், கார் டிரைவர் வேறு.

சகுந்தலா தன்மானத்தை நினைக்காமல் அவர் காலில் விழுந்தாள்.

'என்னைக் காப்பாத்துங்கப்பா... தயவுபண்ணி உதவி பண்ணுங்க... நீங்க மறுத்திட்டா எனக்கு உதவ வேற யாருமே இல்லேப்பா... அப்பா...'

கண்ணீர் பெருகக் கதறியவளை அப்பா எட்டி உதைத்தார்.

'அறுவா எங்கடா? கொண்டு வர இத்தனை நாழியா? கேடு கெட்டவளை, பெத்த தோஷத்துக்கு இவளை ஒரே போடா போட்டுட்டு, நானும் வெட்டிகிட்டு சாகறேன்... கொண்டாடா...,

ஆவேசம் வந்தது போல அவர் கத்த, அம்மாவும் இதர பெரியவர்களும் பயந்து நடுங்கி நிற்க, இங்கு ஒரு ஜீவன் கூட நமக்காகப் பரிந்துவரத் தயார் இல்லை என்பது புரிய, சகுந்தலா மெதுவாக எழுந்து காரில் அமர்ந்தாள்.

நடு இரவையும் தாண்டி வீட்டை அடைந்தபோது, குடியின் தேவையும், அப்பாவின் கத்தலும், தன் இயலாமையும் ஒன்று சேர, அவள் வெறிபிடித்த நிலையில் இருந்தாள்.

என்ன செய்கிறோம் என்கிற உணர்வு இல்லாமல், உறங்கிக் கொண்டிருந்த சுரேஷை உலுக்கி, 'என் நிம்மதிய பறிச்சிட்டு நீங்க ஆனந்தமா தூங்கறீங்களா? எழுந்திருங்க' என்று அழுகையுடன் அரற்றியதும், மலங்க மலங்கவ்ழித்த படி சுரேஷ் எழுந்து உட்கார்ந்தான்.

அவன் நிதானம் இல்லாமல் சுழன்ற தன் தலையைக் கைகளில் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

'ஹோ...என்னாச்சு உனக்கு? எதுக்காக நடு ராத்திரிலே கலாட்டா பண்றே? ஐ வாண்ட்டு ஸ்லீப்... தள்ளு...'

பேசிக் கொண்டே படுக்க முயன்றவனை சகுந்தலா தடுத்தாள்.

'மாட்டேன். தூங்க விடமாட்டேன். முதல்ல என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க... என் வாழ்க்கையை இப்படி சீரழிச்சதுல உங்களுக்கு என்ன திருப்தி... சொல்லுங்க...'

'ஓ... ஹெல்! ... இதக் கேட்கத்தான் இத்தனை அவசரமா? காலைல பேசிக்கலாம். மூவ் ஓவர் ஐ ஸே...'

சகுந்தலா அவன் சட்டையைப் பற்றித் தன்னிடம் இழுத்தாள். அருகில் இருந்த கூஜாவைக் கவிழ்த்து தண்ணீரை அவன் தலையில் ஊற்றினாள்.

'ஹா... மை காட்! என்ன விடு விடு, பைத்தியம் பிடிச்சு போச்சா உனக்கு?'



கத்தி, அவள் பிடியிலிருந்து விடுபட்டு, தள்ளிப்போன சுரேஷ் கொஞ்சம் போதை தெளிந்தவனாய் வெறித்தான்.

'சக்கு! என்னாச்சு உனக்கு? ஊருக்குப் போறேன்னு சொன்னவ, திடும்னு எங்க வந்தே? மணி இப்ப என்ன? எதுக்காக என் மேல தண்ணி கொட்டினே?'

பதில் கூறாமல் சகுந்தலா உரக்க அழ முற்பட, சுரேஷ் நெருங்கி வந்தான்.

'காது கேட்கலை? வாட் ஹேபண்ட்? சொல்லு...'

'.........'

'ஏய்... இங்க பாரு... என்ன நாடகம் இதெல்லாம்? மனசு சரியில்லேன்னா, பேசாம இரண்டு 'பெக்' சாப்பிட்டுட்டு நிம்மதியா படு... என்னை ஏன் தொந்தரவு பண்ணறே? ம்?'

சகுந்தலா ஓங்கி மாரில் அறைந்துக்கொண்டாள்.

'எப்பப்பாரு குடி பத்தின பேச்சுதானா? அந்த எழவை விட வேற நல்ல பேச்சே இல்லியா? நீங்க நாசமா போனதோடு நிக்காம என்னையும் ஏன் கெடுத்து குட்டிச்சுவராக்கினீங்க? ஏங்க? நா உங்களுக்கு என்ன கெடுதல் பண்ணேன்?'

மீண்டும் அவள் இந்த ரீதியில் பேசுவது பொறுமையை இழக்கச் செய்ய, சுரேஷ் திரும்பிப் படுத்தான்.

தலைகாணியை எடுத்துத் தலைமேல் அழுத்திக் கொண்டான்.

தன் வேதனையோ, பதைப்போ துளியும் புரியாமல் அவன் நிச்சிந்தையாய்ப் படுத்தது கனன்று கொண்டிருந்த கோபத்தை ஊதிவிட, சகுந்தலா தலைகாணியை பிடுங்கித் தூர எறிந்தாள்.

'ஊர் உலகம் நம்மைப் பார்த்து சிரிக்கிறதுஉங்களுக்கு ஏன் தெரியலை?மானமா, நாம் இனியாவது வாழணும்னா

உடனடியா இந்தச் சனியன் பிடிச்ச பழக்கத்தை விட்டொழிக்கணும்னு நா சொல்லறதை ஏன் காதுல வாங்க மாட்டேங்கறீங்...?'

அவள் முடிக்குமுன் சுரேஷ் பளிச்சென்று பாய்ந்து எழுந்தான்.

'தூங்க விடாம நச்சு நச்சுனு புத்தியா சொல்றே? உன்னை... உன்னை...'

அவள் தலை முடியைப் பற்றிக் கீழே தள்ளியவன்' கட்டிலைவிட்டு இறங்கி முதுகில் செமத்தியாய் நாலு தரம் அறைந்தான். அப்படியும் ஆத்திரம் தணியாமல் காலால் புரட்டி உதைத்தான்.

'நாய்... தேவடியா நாய்... குடிகார சனியன்...எனக்கு நீ புத்தி சொல்ல வறியா...முதல்ல உன் தோலை உரிச்சு உப்பு தடவிட்டுதான் மறுவேலை...'

'உங்களுக்கு நா புத்தி சொல்லாம வேறயார் சொல்லுவாங்க? கட்டின பெண்டாட்டிய ஊர் சிரிக்க வைச்சவருக்கு புத்தி சொல்ல இப்பவாவது எனக்குத் தைரியம் வந்துதேனு சந்தோஷப்படுங்க...'

'என்னது? என்னது? சந்தோஷமா? அது நீ எப்ப என்னை விட்டு ஒழியறியோ அன்னிக்குதாண்டி வரும்...'

'உங்களுக்கு பெண்டாட்டியா வாழற கேவலத்தை விட செத்து மடிஞ்சிடலாம்...?

'பேசாத... முதல்ல அதச் செய்...'

'நா செத்துட்டா சொத்து பூரா உங்க கைக்கு வந்திடும், அத்தனையும் குடிச்சே அழிக்கலாம் ... அந்த ஆசைதானே இப்படி பேச வைக்குது?'

'எங்கப்பா பணம்... அதை நானு என்ன வேணா செய்வேன்... நீ யாரு கேட்க? ராஸ்கல்...முதல்ல என் கண் முன்னால நிக்காம ஒழி...'



அவிழ்ந்து தொங்கிய தலைமுடியை அலட்சியமாய் பின்னுக்குத் தள்ளின சகுந்தலா அவனை முறைத்தாள்.

'ஒழியத்தான் போறேன்... இனிமே நா இருக்கிறதும் சாகிறதும் ஒண்ணுதான்.'

வெறி அடங்காமல் குமுறியபடி அவள் எழுந்து போக, அலமாரியைத் திறந்து பாட்டிலை எடுத்து, அப்படியே ஸ்டிஃப்பாக வாயில் ஊற்றிக் குடித்த சுரேஷ், பாதியில் தடைபட்ட உறக்கத்தைத் தொடர அவசரமாய்படுக்கையில் விழுந்தான்.

## 9

கிளப்புக்கு கிளம்பிக் கொண்டிருந்தவனைத் தொலைபேசி அழைக்க, எரிச்சலுடன் 'சரியான கழுத்தறுப்பா போச்சுடா! சாப்பிடகிளம்பறப்பக் கூடவா 'போன் கால்? யாருனு கேளு' என சுந்தர் ரிஸிவரை எடுத்து 'ஹலோ!' என்றான்.

'இருக்காரு... இந்தாப்பா உனக்குதான். வீட்டுலேந்து சின்னையன் பேசறான்.'

ஏழுமலைக்கு பர்த்தியாகச் சமையல் வேலைக்கு வந்தவன் இந்தச் சின்னையன்.

சுரேஷ் ரிஸீவரை வாங்கிக்கொண்டான்.

'என்னடா? ம்..ம்..ம்...இதுக்கா இப்படி விழுந்தடிச்சிகிட்டு போன் பண்றே? ராத்திரி படுக்க நேரமாயிட்ட தால தூங்கறாங்க போலிருக்கு... எழுப்பாத... தூங்கட்டும்...

ரிஸீவரை வைத்தவன் மேஜை டிராயரைப் பூட்டிச் சாவியைப் பையில் போட்டான்.

'லெட்ஸ் கோ.'

'சின்னையன் எதுக்கு கூப்பிட்டான் சுரேஷ்?'

'இன்னும் சக்கு எழுந்துக்கலியாம்...இரண்டு தரம் கதவைத் தட்டிப் பார்த்தானாம். பதில் சொல்லலியாம்... கவலைப் பட்டுகிட்டு என்னைக் கூப்பிட்டிருக்கான்.'

'மணி பன்னிரண்டாகுது? இன்னுமா எழுந்திருக்கல?'

காரைக் கிளப்பின சுரேஷ் சூள் கொட்டினான்.

'நேத்து ராத்திரி அவ வீடு வந்து சேர்றப்போ மணி ஒண்ணோ இரண்டோ... அப்பா வீட்டுல என்னமோ கசமுசா நடந்திருக்கு. ஒரே அழுகை, கத்தல்...அதுக்கும் மேல தூங்கினதால டயர்டா இருந்திருக்கும்—!'

'இரண்டு வாரம் இங்க இருக்க மாட்டாங்கனு சொன்னே?'

'அப்படிச் சொல்லிட்டுதான் போனா ... என்ன நடந்ததோ உடனே திரும்பிட்டா.'

'விவரம் சொல்லலியா?'

'ம்ஹூம். ரொம்ப அப்செட்டா இருந்தா...காலைல பேசிக்கலாம்னு விட்டுட்டேன். சாயங்காலம் வீட்டுக்குப் போனா தான் தெரியும்.'

அத்துடன் மனைவியை மறந்துவிட்டுக் கிளப்பில் நண்பர்களோடு சேர்ந்து பியர் குடித்து சீட்டாடிக் கொண்டிருந்தவனை மீண்டும் மூன்று மணி சுமாருக்கு சின்னையன் அழைத்தான்

'அம்மா இன்னும் எந்திரிக்கலிங்க...எனக்கு பயமா இருக்கு... நீங்க உடனே வறிங்களா?'



அவன் குரலில் இருந்த பதட்டம் சுரேஷைத் தாக்கினதும், போட்டது போட்டபடி சுந்தர், 'நாங்களும் வறோம்ய்யா?' என்று கிளம்பின நண்பர்கள் சகிதம் உடனே வீட்டுக்கு வந்தான்

ராத்திரி இவனோடு சண்டை போட்ட பிறகு சகுந்தலா கீழே அம்மாவின் படுக்கை அறையில் படுக்கப் போயிருக்க வேண்டும்.

கதவு உள்பக்கம் தாள் போடப்பட்டிருந்தது.

தோட்டத்து ஜன்னல்களெல்லாம் அழுந்த மூடியிருந்தன.

'சக்கு... சக்கு ஊ'

உரக்கக் குரல் கொடுத்துக் கதவைத் தட்டி,...

எதற்கும் பதில் இல்லை.

சுரேஷ் இப்போது நிஜமாகவே பயந்து போனான்.

தோட்டக்காரனை அழைத்து ஏணியில் ஏறி பாத்ரூம் வெண்டிலேட்டர் வழியாக ஏதாவது தெரிகிறதா என்று பார்க்கச் சொன்னான்.

இல்லை.

பத்து நிமிஷங்கள் என்னென்னவோ செய்தும் பதில் இல்லாமல் இருக்க, கதவை உடைக்கத் தீர்மானித்தார்கள்.

சுத்தியல், இரும்பு உலக்கைளால் ஓங்கி ட்ரைவரும், தோட்டக்காரனும் கதவைச் சில்லுகளாக உடைக்க, துளியாய் கிடைத்த இடைவெளியிலேயே ஃபேன் மாட்டும் கொக்கியிலிருந்து சகுந்தலா தொங்குவது புரிந்து போனது.

'ச... க்கு... ஊ...'

கதிகலங்கி அலறினவனை சுந்தர் அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

'முதல்ல போலீஸுக்கு போன் பண்ணுங்கப்பா...'

'சின்னையா... பதறாம கைய உள்ளார விட்டுத் தாழ்ப்பாள் திற...

'வேணாம்... யாரும் கிட்டப் போயிடாதீங்க — இது போலீஸ் கேஸ்...'

'சுரேஸ்! கொஞ்சம் நிதானப்படுத்திக்கப்பா... நோ... டோண்ட் டச் ஹர்... இறந்துட்டாப்பா... பாடி விரைச்சு போச்சி பாரு... வா... இப்படி உட்காரு... கண்ட்ரோல் யுவர் செல்ஃப் ஐ ஸே... போலீஸ் வந்தா கேள்வி கேட்பாங்க... பதட்டப்பட்டா எப்படி? என்னமா பண்ணறது... அருமையான பொண்ணு, உன் மனசறிஞ்சி நடந்தா... ஹூம் யார் என்ன சொல்லி உன்னை தேத்த முடியும்?

ஆளாளுக்கு ஒன்று கூறி, கைத்தாங்கலாய் சுரேஷை ஹாலுக்கு அழைத்து வந்தார்கள்.

சுந்தர் மாடிக்கு ஓடிச் சென்று, அலமாரியில் இருந்த விஸ்கியில் தண்ணீர் கலக்காமல் ஒரு கிளாஸில் விட்டு வந்து சுரேஷிடம் நீட்டினான்.

'என்னை விடுங்கப்பா... நா போறேன். என் சக்கு போன இடத்துக்கே போயிடறேன். இவ இருந்தது கொண்டு அம்மா இறந்த துக்கத்தைத் தாங்கிக் கிட்டு இருந்தேன். இனிமே வாழ்க்கைல எனக்கு என்ன இருக்கு! யார் இருக்காங்க? சக்கு... என் கண்ணம்மா... உனக்கு நா என்ன கொறை வைச்சேன்! ஏம்மா? ஐயோ... ஏம்மா?'

நெற்றியில் அறைந்துக்கொண்டு கதறியவனை நாலு பேர்களாக அமுக்கிச் சமாதானம் பண்ணினார்கள்.

சுந்தர் கட்டாயப்படுத்தி டிரிங்கைக் குடிக்க வைச்சு, போலீஸ் வருவதற்குள் சுரேஷ் லேசாக நிதானத்துக்கு வந்திருந்தான்.



கைரேகை நிபுணரும் புகைப்பட நிபுணரும் தங்கள் வேலைகளைக் கவனித்த நாழிகையில் உடலை இறக்கிப் படுக்க வைத்தார்கள்.

உடம்பின் விரைப்பை வைத்து இறந்து பன்னிரண்டு மணி நேரமாவது ஆகியிருக்கும் என்று டாக்டர் கணக்கிட்டார்.

இன்ஸ்பெக்டர் முதலில் ஆட்களை ஒவ்வொருவராக அழைத்து விசாரித்தார்.

சின்னையன்: 'வழக்கமா ஏழுமணிக்கு தாங்க அம்மா எந்திரிப்பாக. எட்டுக்குக் கதவைத் தட்டினேன். பதில் இல்லே. அசதி. தூங்கறாங்களாக்கும்னு விட்டுவிட்டேன். பன்னிரெண்டு வரைக்கும் வெளியிலே வராம இருக்கக் கொண்டு ஐயாவுக்கு போன் பண்ணித் தகவல் சொன்னேன். 'இராத்திரி ரொம்ப லேட்டா படுத்தாங்க... தூங்கினா எழுப்பாதே'ன்னு சொன்னாரு. திரும்ப மூணு மணிக்கு என்னடாதுனு பயமாயிருக்க, ஐயாவ உடனே வரச் சொன்னேங்க...'

டிரைவர்:— 'சந்தோஷமா ஊருக்குப் புறப்பட்டாங்க. வழிநெடுக்க தான் கிராமத்துல வளர்ந்தது பத்தியும், அப்பா தன்னண்ட எத்தனை பிரியமா இருப்பார்ன்றதைப் பத்தியும் பேசிட்டே வந்தாங்க... ஆனா, தெருவுல நிக்க வைச்சி அவங்க அப்பா கண்டபடி கத்தினதும் அம்மா உடைஞ்சி போயிட்டாங்க... கால்ல கூட விழுந்தாங்க... எதுக்கும் அவங்கப்பா அசையலை. 'அறுவாளக் கொண்டா வெட்டிடறேன்' னு கத்தினாரு. அப்பால அம்மா திரும்பிட்டாங்க வழி நெடுக்க அழுதிட்டே வந்தாங்க... ஒரு வார்த்தை கூட பேசலை...'

இன்ஸ்பெக்டர் சுரேஷிடம் வந்தார்.

'உங்க மிஸஸுக்கும் அவர்களைப் பெத்தவங்களுக்கும் ஒத்துக்காதா மிஸ்டர் சுரேஷ்?'

'எங்கம்மா செத்த நாள்லேந்து அவங்க இங்க வர்றதுல்லே...' நீ எங்க பொண்ணு இல்லே' னு அன்னிக்கு சொல்லிட்டுப் போனவங்கதான்.'

'இப்படி பேசக் காரணம்?'

சுரேஷ் சிகரெட்டை இழுத்து நெஞ்சில் புகையை நிரப்பிக் கொண்டான்.

'அவங்க ரொம்பச் சாதாரணமானவங்க இன்ஸ்பெக்டர். பணக்கார இடத்துல இருக்குற சில பழக்க வழக்கங்கள் அவங்களுக்குப் பிடிக்காது. அதுக்காக சண்டை போடுவாங்க...'

'அப்படின்னா?'

'க்ளப் இங்கே அங்கே பொண் போறது அவங்களுக்கு பிடிக்காது. எனக்கு பிடிச்ச மாதிரி நாகரிகமா, ஸோஷியலா அவ இருப்பா... அது தப்புன்றது அவங்க எண்ணம்...'

பிறந்த வீட்டுக்குப் போனவளை, தெருவில் வைத்தே பெற்றவர் அவமதித்த கொடுமை தாளாமல் சகுந்தலா தூக்குப் போட்டுக் கொண்டதற்கான சாட்சியங்கள் பலமாக இருக்க, போஸ்ட் மார்டம் செய்ய சடலத்தை அனுப்பி விட்டு, மேற்கொண்டு அங்கு தங்கி, நொந்திருக்கும் சுரேஷை இன்னும் காயப்படுத்த விரும்பாமல் போலீஸ் நகர்ந்தது.

உடலைக் காலையில்தான் கொடுப்பார்கள்; காரியங்கள் அதற்குப் பிறகுதான் என்பது தீர்மானமாக, 'அவளுக்கு' நா என்னடா குறை வைச்சேன்? ஏண்டா? ஏண்டா இப்படி மோசம் பண்ணிட்டா?' என்று அரற்றின சுரேஷை நண்பர்கள் சூழ்ந்து உட்கார்ந்து ஆறுதல் சொன்னார்கள்.



'என்னப்பா பண்ணறது... அவங்க தலை விதி அவ்வளவுதான்... கொடுப்பினை இல்லே, போயிட்டாங்க ...இதுக்கு நீ என்ன பண்ண முடியும்?'

'தேத்திக்கப்பா... உடைஞ்சி போயிடாதே... ஆனாலும் இப்படி சோதனைமேல சோதனையா வந்தா யாரால தான் தாங்கிக்க முடியும்? ஆனாலும் உங்க மாமனார் ஒரு மிருகம். வார்த்தையகொட்டி மகளை சாகடிச்சிட்டாரே!'

'அழாத சுரேஷ். தைரியமா இரு... நாங்கள்ளாம் இருக்கோம். உன்னை அனாதரவா விட்டுடுவோமா?'

'என்ன அன்யோனியம், என்ன அண்டர்ஸ்டாண்டிங்! நா கூட என் பெண்டாட்டிகிட்ட அடிக்கடி சொல்வேன்பா ...இருந்தா சுரேஷ், சக்கு மாதிரி இருக்கணும்னு... ஹூம், அத்தனையும் பொய்யாக்கிட்டு போயிட்டாங்களே?'

சுரேஷ் பரிதவிக்கிறது நியாயம்தாம்பா... அவங்களுக்கு இவன் என்ன குறை வைச்சிருந்தான். உள்ளங்கையில வைச்சி ராணியாட்டம் தாங்கினான். பாவம்... எப்படி பிரிஞ்சி இருக்கப் போறானோ?'

'இருந்துதான் ஆகணும். வேற வழி? எப்படியாவது மனச தேத்திகிட்டு இவன் வாழ்ந்துதான் ஆகணும்... தைரியம் சொல்லுங்கப்பா... நீங்களும் சேர்ந்து கலங்காதீங்க. விஸ்கி இருக்கப்பா? இல்லேன்னா நா போய் வாங்கி வரேன். இரண்டு பெக் போட்டுகிட்டு அவன் தூங்க பார்க்கட்டும். நாளைக்கு நிறைய காரியம் இருக்கு ...பாவம்.'

அன்றைக்கு நாலைந்து பெக்குகளை சுரேஷ் குடித்து, தன் வருத்தத்தை மறக்க பார்த்தபோது, நண்பர் குழுவும் நாங்கள் புரிந்து கொள்வோம் என்கிற அனுசரணையுடன் கம்பெனிகொடுத்துக்கொண்டு பக்கத்திலேயே நின்றார்கள்.

முதல் பெக் உள்ளே போனதும் அது நாழிகைவரை உறுத்தின உறுத்தல் சகுந்தலாவை முதல் நாள்இரவு 'ஒழி,

செத்து ஒழி' என்று போதையில் சொன்னதை நினைத்து உண்டான குற்ற உணர்ச்சி, சுத்தமாய் மறைந்து, இவர்கள் சொல்வது போல தப்பு அவளைப் பெத்தவர் பேரில்தான்; நான் என்ன செய்வேன்?' என்ற சமாதானம் எழுந்தது.

இரண்டாவது பெக்— கடைசியாக சகுந்தலா 'நா செத்துட்டா சொத்து பூரா உங்க கைக்கு வந்திடும்கிற குஷியா?' என்று கேட்டதை ஞாபகப்படுத்த, அட! அந்த ப்ளஸ் பாயிண்ட் ஒண்ணு இருக்கா?— என்ற ஆச்சரியம் உள்ளுக்குள் பரவியது.

மூன்றாவது, நாலாவதும் உள்ளே போகையில் சுற்றி இருந்த நண்பர்கள் மகா கரிசனத்துடன், பாவம்பா... எத்தனை வேதனை? எப்படி தாங்குவான்? இன்னொரு பெக் குடுப்பா' என்று அனுதாபப்பட,—சகுந்தலா இப்படி அகாலமாய் இறந்து மற்றவரின் பரிதாபத்தைக் கிளறி விடுவது, கவலைப் படாமல் இன்னும் பல வருஷங்களுக்கு குடிக்க இன்னொரு காரணம் கிடைத்து விட்டது என்ற உரிமை, தமதம என்று நெஞ்சில் ஒரு பக்கமாய், தலைகால் புரியா தசந்தோஷத்தைப் பொங்கவைக்க, அதை வெளியில் காட்டாமல் இருக்கவேண்டி ப்ரயத்தனப்பட்டு, 'என்னால முடியலைடா. என் சக்கு இல்லாம நா எப்படி இருப்பேன்; ஐயோ, அவளுக்கு என்ன குறை வைச்சேன்? ஏண்டா? ஏண்டா?' என்று மறுபடி குரல் எடுத்து சுரேஷ் புலம்ப ஆரம்பித்தான்.

★